விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 21 புதன்கிழமை (07.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323

## பாராளுமன்றை காலம் தாழ்த்துவது ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடு

### அமெ. தூதுவரிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

**(கொழும்பு) பாராளுமன்றை கூட்டுவதனை காலந்தாழ்த்துவது ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரான செயல் என அமெரிக்க தூதுவரிடம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்ளிட்ஸ் நேற்று எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பில் தூதுவரை தெளிவுபடுத் 23



## அச்சுவேலியில் தொடர் திருட்டில் ஈடுபட்ட இருவர்

### இலந்தையடி வாலிபர்களால் மடக்கிப்பிடிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் தொடர் திருட்டில் ஈடுபட்டு வந்த இரு திருடர்களை வளலாய் இலந்தையடி வாலிபர்கள் மடக்கிப் பிடித்து அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம் 24

### பணம், பதவியை வழங்குவதன் மூலம்

## அனைவரையும் விலைக்கு வாங்க முடியாது - ராஜித

(கொழும்பு)

பிரதி அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட மனுஷ நாணயக்கார. அப்பதவியினை இராஜினாமா செய்து. மீண்டும் எம்மோடு இணைந்து கொண்டுள்ளார். 24

## சபாநாயகரின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது: ஐ.தே.க

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக ஏற்றுக்கொள்ளவில்லை எனவும். அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் சபாநாயகர் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளமையினை நாம் வரவேற்கின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானோரின் 24

## மகிந்த, மைத்திரியுடன் தீபாவளி கொண்டாடிய இரா.சம்பந்தன்



03

## தமிழரின் நன்மைக்காக மகிந்தவை எதிர்ப்போம்

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் நன்மைக்காக மகிந்தவை கடுமையாக எதிர்ப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும், தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் எனவும் தற்போதைய புதிய அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

இந்நிலையில் இதுதொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கடந்த மூன்று வருடங்களில் 24

## மழையுடன் கூடிய காலநிலை தொடரும்

### மீனவர்களுக்கும் எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் கன மழை மற்றும் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன் படி வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா, சப்ரகமுவ, வட மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் 150 மில்லி 24

## த.தே.கூக்கு அழைப்பு விடுத்துள்ள ஜனாதிபதி

### இன்று சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டில் அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்ற நிலையில் இன்று புதன்கிழமை சந்திப்பிற்கு வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ்த் 24

## வடக்கு - கிழக்கு ஜனாதிபதி செயலணி திட்டமிட்டபடி நாளை

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணி கூட்டம் திட்டமிட்டபடி நாளை வியாழக்கிழமை நடைபெறவு 24

### சபாநாயகருக்கு எதிராக

## பாராளுமன்ற ஊழியர்கள்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் ஊழியர்கள் ஜனாதிபதி சிறிசேனவிற்கு ஆதரவாக செயற்பட ஆரம்பித்துள்ளதுடன் சபாநாயகரின் 23

## தீபாவளிக்கு புத்தாடைகள் வாங்கச் சென்ற இளைஞர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீபாவளிக்கு புத்தாடைகள் வாங்கச் சென்ற இளைஞர் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சங்கிலியன் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இருசக்கர உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

கோப்பாய் வடக்கை சேர்ந்த சின்னத்தம்பி தர்சீலன் (வயது 20) என்பவரே மேற்படி விபத்தில் உயிரிழந்ததுடன் அவருடன் பயணித்த மாணவர் ஒருவர் படுகா 23

### தமிழர்களுக்கு அரசு எதையும் தராது

## சர்வதேசமே எமக்கு பெற்றுத்தர வேண்டும்

### சமகால அரசியல் தொடர்பில் விக்னேஸ்வரன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

எந்தவொரு அரசாங்கமும் தமிழர்களுக்கு எதனையும் தரப் போவதில்லை அதனை சர்வதேசமே எமக்கு பெற்றுத்தர வேண்டும் என வட மாகாண முன்னாள் 24

## எரிபொருள் பவுசருடன் மோ.சைக்கிள் மோதுண்டதில் இரு இளைஞர்கள் பலி

### தீபாவளியன்று கிளிநொச்சியில் துயரம்

(கிளிநொச்சி)

எரிபொருள் பவுசரும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

கிளிநொச்சியில் ஏ9 வீதியில் தீபாவளி தினமான நேற்றிரவு 7.30 மணியளவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள் விநியோகத்துக்கு பயணித்துக் கொண்டிருந்த எரிபொருள் பவுசரும் பரந்தன் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக் 24



## பிரதமர் நியமனம் சரியானதே

### பிரித்தானியாவின் நெஸ்பி கருத்து

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் மற்றும் பாராளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் சம்பந்தமாக பிரித்தானியாவின் லோர்ட் நெஸ்பி கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியால் புதிய பிரதமர் நியமிக்கப்பட்டமையானது அரசியலமைப்புக்கு எதிரானது 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### சுமந்திரனை கட்சியிலிருந்து நீக்குங்கள்

# தமிழரசுக் கட்சித் தலைவர் மாவைக்கு மறவன்புலவு சச்சிதானந்தன் கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினரும், தமிழரசு கட்சியின் உப செயலாளருமான எம்.ஏ.சுமந்திரனை கட்சியில் இருந்து நீக்குமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா வுக்கு, சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் இளைஞ ரணி மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றும்போது, ஜனாதிபதியை “நீ” என விளித்து ஒருமையில் உரையாற்றி இருந்தார்.

அந்நிலையில் சுமந்திரன் அவ்வாறு ஒருமையில் ஜனாதிபதியை விளித்து உரை யாற்றியதை ஏற்க முடியாதெனவும் அதனால் அவரை தமிழரசுக் கட்சியில் இருந்து நீக்கு மாறும் நேற்று (செவ்வாய்க்கிழமை) கடித மொன்றை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு மறவன்புலவு சச்சிதானந்தன் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் அவர் கூறியுள்ளதா வது, “தமிழர் சார்பாளர் ஒருவர் சினந்து வெறுப்பைச் சிந்தியவாறு, பெரும்பான்மை தலைமைச் சார்பாளரை நீ என விளித்தல் தமிழரின் மரபல்ல.

அந்தவகையில் முதிர்ச்சியற்ற வெறுப் பைத் தூண்டும் பேச்சு. ஆற்றாமையின் உச்ச வெளிப்பாடு. மேலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன், முன்பும் அவுஸ்திரேலியாவில் நிகழ்த்திய பேச்சு ஒன்றுக்காக சுமந்திரனைக் கண்டித்தார். ஆனால் தற்போது இத்தகைய உரையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

1960 மற்றும் 1971ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் காலங்களில், தமிழரசுக் கட்சியின் சிலரின் இவ்வாறான பொறுப்பற்ற உரையினால் பெரும்பான்மை மக்கள் தமக்குத் தாமே தமிழர் ஆதரவு இல்லாமல் ஆட்சி அமைத்தார்கள்.

இவ்வாறு பெரும்பான்மை மக்களை ஒன்றிணைத்து தமிழர் ஆதரவில்லாத ஆட்சியை 2018க்குப் பின்வரும் காலங் களில் நிகழ்த்துவார்களாயின் தமிழர்கள் நிச்சயம் நசுக்கப்படுவார்கள்.

இவ்வாறு தமிழரை நசுக்கும் ஆட்சி யைத் தேர்ந்தெடுக்கச் சிங்களவரைத் தூண்டிய அமைச்சர் சுமந்திரனை இலங் கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பொறுப்புகளிலும் இருந்தும் விலக்க வேண் டும் என அக்கடிதத்தில் மறவன்புலவு சச்சிதானந்தன் வலியுறுத்தியுள்ளார். (ம)

### நான் முன்வைத்த கோரிக்கைகளை

# நிறைவேற்றாவிட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவேன் – வியாழேந்திரன்

11 அமசக் கோரிக்கைகளை முன்வைத்தே அரசாங்கத்தில் பிரதி அமைச்சர் பதவியை பெற்றுக் கொண்டதாக எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

அந்த கோரிக்கைகளில் 30 சதவீதம் நிறைவேற்றப்படாவிட்டால் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதாகவும் அவர் கூறி னார்.

கொழும்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த 11 அம்சக் கோரிக்கைகளில் 30 விகிதம் கூட நிறைவேற்றப்படவில்லை என் றால் இந்த அரசாங்கத்தைகூட விமர்சிப் பேன் என்றும் கூறினார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வாக் களித்தால், தானும் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களிப்பதாகவும், அவர்கள் மத் தியஸ்தம் வகித்தால் தானும் மத்தியஸ்தம் வகிப்பதாகவும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வளவு காலமும் உரிமை அரசியலில் ஈடுபட்டு வந்த போதும் இதுவரை எதனையும் சாதிக்க வில்லை. தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி யின் பலனும் கிடைக்கவில்லை. ஆகவே உரிமையை அரசியலுடன் அபிவிருத்தியும் கலந்த அரசியல் வேண்டும் என்பதற்காகவே புதிய அரசாங்கத்தில் இணைந்து கொண்ட தாகக் கூறினார்.

உரிமையை அரசியலை பேசிப் பேசி இவ்வளவு காலமும் நிறையவற்றை இழந் திருப்பதாகவும், ஆகவே தொடர்ந்தும் இழக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாணத்தைவிட கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு நிறைய பிரச் சினைகள் இருப்பதாகவும், கடந்த அரசாங் கத்தில் கிழக்கில் உள்ள தமிழர்களுக்கு எது வித அபிவிருத்தி திட்டங்களும் முன்னெடுக் கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில்தான் அரசாங்கத்தில் இணைந்திருப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ அழைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

ஆனால் ஜனாதிபதியோ வடக்கு கிழக்கை இணைக்க ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்று கூறியிருப்பது தொடர்பில் அவரிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோது, அதற் காக அபிவிருத்தியையும் நாம் இழக்க முடி யாது என்று கூறினார்.

அத்துடன், அரசியல் கைதிகளின் விடு விப்பு, காணி விடுவிப்பு மற்றும் இனப் பிரச்சி னைக்கான தீர்வுத் திட்டம் உள்ளிட்ட கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்தே தற்போதைய அரசாங்கத்தில் இணைந்து கொண்டதாகவும் பிரதியமைச்சர் வியாழேந் திரன் கூறியுள்ளார். (ம)

# அரசியல் பிழைப்புக்காக சிலர் பிரபாகரனின் பெயரை பயன்படுத்துகிறார்கள்

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

வேலுப்பிள்ளை பிரபாகரன் இறக்க வில்லை என கூறுபவர்கள் மகிந்த ராஜபக் ஷவை போர்க்குற்றவாளிகள் இல்லை என கூற வேண்டும் அப்படி செய்யாமல் இந்த குற்றசசாட்டை அவர்கள் முன்வைக்க கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரை கூறி சில அரசியல் வாதிகள் பிழைப்பு நடத்துகின்றனர் என்றும் அவர் குற் றம் சாட்டியிருந்தார்.

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடி நிலை தொடர்பில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது தமிழகத்தில் இருக்கும் அரசி யல்வாதிகள் பிரபாகரன் இன்னும் உயிரி ழக்கவில்லை என்றும், அவர் உயிருடன் இருப்பதாகவும் கூறுகின்றனர் என கேள்வி யெழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த அவர்,

“பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்றால் எதற்காக எம்மீது உலக நாடுகள் போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின் றன. பிரபாகரன் உயிருடன் இருப்பதாக கூறி னால் அவர்கள் எதைப்பற்றியும் குற்றச்சாட்டு முன்வைக்கக் கூடாது.

வேலுப்பிள்ளை பிரபாகரன் இறக்க வில்லை என்றால், மகிந்த ராஜபக்ஷ போர்க் குற்றவாளி இல்லை என அவர்கள் கூற வேண்டும்.

ஒரு சந்தர்ப்பத்தில் மகிந்த ராஜபக்ஷ குற்றவாளி என கூறுகின்றார்கள், ஒரு சமயம் மகிந்த அரசாங்கத்தால் கொல்லப் பட்டவர் உயிருடன் இருப்பதாக கூறுகின்றார் கள். அவர்கள் தங்கள் பிழைப்பிற்காக கூறிக் கொண்டு இருக்கின்றார்கள்.

தமிழகத்தில் உள்ள அரசியல்வாதிகள் இதுபோன்று கூறுகின்றார்கள். அதேவேளை வடக்கு மாகாணத்திலும் இதேபோன்று இருக்கின்றனர். அவர்கள் விடுதலை புலிகளின பெயரை கூறி பிழைப்பு நடத்துகின்றனர்.

இது தவறு. எனவே படித்த தமிழ் இளை ஞர்கள் இதற்கு எதிராக செயற்பட்டு மக்கள் இணைந்து வாழ வழியமைக்க வேண்டும். தங்கள் பிழைப்பிற்காக தமிழ் சமுதாயத்தை பயன்படுத்தும் அரசியல்வாதிகளை அனு மதிக்கக் கூடாது என கூறினார்.

மேலும் தமிழ் சமூகம் மீது உண்மையான அக்கறை இருக்கும் என்றால் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு தங்களுடன் பேச்சு வார்த் தைக்கு வரவேண்டும் என்றும் அவர் கூறி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் 622வது நாளாகவும் போராட்டம்

யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவுகள், 622ஆவது நாளாகவும் வவுனியாவில் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

தீபாவளி நாளான நேற்றும் (செவ்வாய்க் கிழமை) இம்மக்கள் தமது உறவினர்களுக் காக கண்ணீருடன் மழைக்கு மத்தியில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின் றனர்.

கடந்த தீபாவளிக்கு முன் தமது பிள்ளை களுக்கான தீர்வு கிடைக்குமென தமிழ் அரசியல் தலைமைகள் தெரிவித்தபோதி லும் இதுவரை எவ்வித தீர்வும் எட்டப்பட வில்லையென உறவினர்கள் கண்ணீருடன் தெரிவிக்கின்றனர்.

யுத்தம் நிறை வடைந்து 10 வரு டங்களாகின்ற போதும் தமது துயர் துடைப்பார் யாரு மில்லையென இம் மக்கள் வருத்தத் துடன் தெரிவிக்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பில் எவ்வித பதிலும் வழங்கப்படாத நிலையில், அவர்களுக்கு என்ன நேர்ந்த தென அரசாங்கம் தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்தி இம்மக்கள் போராட்டத்தில் ஈடு படுகின்றனர்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், தமது உறவுகள் குறித்து கவனஞ் செலுத் தப்படுவதில்லையென தெரிவிக்கும் இம்மக் கள், தமது நிலையுணர்ந்து மனிதாபிமான ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)

# இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் திட்டமிட்டவாறு வழங்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தம் மற்றும் வன்செயல் கள் காரணமாக பல்வேறு இழப் புக்களைச் சந்தித்த மக்களின் ஒரு தொகுதியினருக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கான காசோலை கள் வழங்கும் நிகழ்வுகள் ஏற் கெனவே அறிவிக்கப்பட்டவாறு நடைபெறும் என மீள்குடியேற்றம் புனரமைப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு மாவ ட்ட செயலகத்தில் 320 பேருக்கும் கிளிநொச்சியில் பகல் 10.30 மணிக்கு கூட்டுறவு மண்டபத்தில் 300 பேருக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் 170 பேருக்குமான இழப்பீட்டுக் காசோலைகள் 2 மணிக்கு திட்ட மிட்டபடி வழங்கி வைக்கப்பட வுள்ளது.

எனவே காசோலைகளைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்பட் டுள்ள பயனாளிகள் குறித்த நேரத்திற்கு குறிப்பிட்ட இடத் திற்கு வருகைதந்து பயன்பெறு மாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அதேவேளை இந்நிகழ்வுக ளைத் தொடர்ந்து தேவைகள் மற்றும் கோரிக்கைகளுடன் சந் திக்க வரும் மக்களையும் சந் திக்கவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார். (ம)


**வாடகைக்கு**

அரியாலையில் சகல வசதியும் கொண்ட வீட்டின் இரண்டு அறைகள் கொண்ட பகுதி சிறிய குடும்பத்துக்கு வாடகைக்கு தரப்படும். முற்பணம் இல்லை, குறைந்த வாடகை. (6357)

077 325 9934

**பணிப்பெண் தேவை**

தங்கி நின்று வேலை செய்ய வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். (6357)

077 325 9934

WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள,

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

(C-4210)

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com


## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயமலர் அழகானந்தம்



“உதயபதி” வதிரி கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி ஜெயமலர் அழகானந்தம் 2018.11.05 திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான ஜெகசோதி - நாகரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அழகானந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும் ஜெயானந் (சுவிஸ்), தேவானந்தம் (நோர்வே), சதானந்தன் (கனடா), சிவானந்தன் (அவுஸ்திரேலியா), கிருஷ்ணானந்தன் (ஆசிரிய ஆலோசகர் - வலயக்கல்விப் பணிமனை - கிளிநொச்சி) ஆகியோரது அன்புத் தாயாரும் ஜெனேஸ்வரி, ஸ்ரீமதி, ஜமுனா, துஜிதா, மோகனறஜனி (ஆசிரியை - யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை) ஆகியோரது பாசமிகு மாமியாரும் ஜெனீனன், சருஜன் (அமரர்), மதுஜன், அபர்ணா, திவ்யன், நிலவினியன், தனுஷ், அபிஷேகா ஆகியோரது அன்புப் பேர்த்தியாரும் அமரர் தவமலர் நமசிவாயம், அமரர் நேசமலர் பாலேந்திரம், செல்வமலர் கிருஷ்ணபிள்ளை, அமரர் ஜெக சோதி காஞ்சனாதேவி, நிர்மலாதேவி இராசதுரை ஆகியோரது அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (2018.11.07) பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும். (C-4351)

வதிரி, காரவெட்டி. தகவல்:- பிள்ளைகள் 021-226 3197, 0776529007

## மைத்திரியின் முதலாவது விக்கெட் சரிந்தது

# பிரதியமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார் மனுஷ


(கொழும்பு)

மனுஷ நாணயக்கார தனது பிரதியமைச்சர் பதவியை நேற்றுக்காலை இராஜினாமா செய்துள்ளார்.

தனது பதவியை இராஜினாமா செய்த மனுஷ நாணயக்கார அலரிமாளிகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளார்.



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சராக மனுஷ நாணயக்கார அண்மையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. (இ-7)



(கேலிச்சித்திரம்)

# புதிய அரசை சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை!

## ரணிலுக்கு ஆதரவளித்த மனுஷ நாணயக்கார ஜனாதிபதிக்கு விளக்கி விலகல் கடிதம்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தை சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை பின்னரே உணர்ந்து கொண்டேன் என பிரதியமைச்சர் பதவியினை இராஜினாமா செய்துள்ள மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமது பிரதியமைச்சர் பதவியியை இராஜினாமா செய்துள்ளமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், "மகிந்த ராஜபக்ஷவை நீங்கள் பிரதமராக நியமித்து நாடாளுமன்ற அமர்வுகளை இடைநிறுத்தியதை தொடர்ந்து கடந்த சில நாட்கள் குழப்பம் மிகுந்தவையாக காணப்படுகின்றன.

அவ்வேளை நான் உங்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேன்.



நீங்கள் தெரிவித்ததை ஏற்றுக்கொண்டு புதிய அரசாங்கத்தில் பிரதி அமைச்சராக பணியாற்றும் அரசியல் முடிவையெடுத்தேன்.

உங்களின் நடவடிக்கையினால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளை தெளிவுபடுத்தி சபாநாயகர் விடுத்துள்ள அறிக்கையொன்றை வாசிக்க நேர்ந்தது.

பதவிப்பிரமாணம் செய்துள்ள புதிய அரசாங்கத்தை எந்த உலகநாடும் ஏற்றுக் கொள்ளவில்லை. இது எனது ஜனநாயக மனச்சாட்சியை ஆழமாக சிந்திக்க தூண்டியுள்ளது. நான் எனது அரசியல் சகாக்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் தீவிர பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதன் பின்னர் இவ்வாறான சட்டவிரோத அரசமைப்பிற்கு முரணான நடவடிக்கைகளுக்குத் துணை போகக்கூடாது என்ற முடிவிற்கு வந்துள்ளேன்.

இதன் காரணமாக எனது ஜனநாயக அரசியல் நம்பிக்கைகள் மற்றும் மனச்சாட்சியின் அடிப்படையில் நான் எனது இராஜினாமாவை சமர்ப்பிக்கின்றேன்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி தேர்தலில் உங்களுக்கு கிடைத்த ஆணையும் அதன் பின்னர் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டதும் அதிகார துஷ்பிரயோகங்களையும் ஜனநாயக விரோத செயற்பாடுகளையும் ஒழிப்பதற்கே என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இன்று முதல் நான் சபாநாயகரின் நிலைப்பாட்டை ஏற்று பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவையே ஏற்பேன்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்னும் 15 பேர் இணைவது உறுதி

## ஐ.தே.க. நம்பிக்கை



(கொழும்பு)

அரசியல் யாப்புக்கு முரணான வேலைத்திட்டத்திற்கு எதிராக மேலும் 15 பேர் தம்முடன் இணைந்து கொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## கடத்தல் முயற்சி முறியடிப்பு

# நாலரைக் கிலோ கஞ்சாவுடன் பொலிஸாரால் ஒருவர் கைது

(கரணவாய்)

கஞ்சாக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை அவரிடமிருந்து 4.415 கிலோக் கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


குடத்தனை பொற்பதி பகுதியில் கஞ்சா கடத்தப் படுவதாக காங்கேசன்துறை பிராந்திய பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்திற்கு இடமான முறையில் சென்ற நபரை சோதனையிட்ட போது அவரிடமிருந்து இரண்டு பொதிகள் மீட்கப்பட்டன.

அதில் இருந்து 4.415 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

அதனை எடுத்துவந்த பொற்பதி குடத்தனையைச் சேர்ந்த 38 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (இ-60)

# ஜனாதிபதி இல்லத்தில் பிரதமர் மகிந்தவுடன் தீபாவளியை கொண்டாடினார் சம்பந்தன்

(கொழும்பு)

அரசதீபாவளிதினநிகழ்வு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமை யில் நேற்று முன்தினம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத் தில் இடம்பெற்றது. இந்நிக ழ்வில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-7)

# ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்புக்கு அமைவாகவே அதிகாரிகள் செயற்படுவர்

## நாடாளுமன்ற பிரதி பொதுச் செயலர் அறிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்ற பொதுச் செயலாளர்கள் அலுவலகத்தின் அதிகாரிகள், ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்புக்கு அமைவாகவே செயற்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் பிரதிப் பொதுச் செயலாளர் நீல் இந்தவெல இதனைத் தெரி வித்துள்ளார்.

16ஆம் திகதி வரையில் இடைநிறுத்தப்பட்டிருந்த நாடாளுமன்ற அமர்வானது, எதிர்வரும் 14ஆம் திகதி மீள நடத்தப்படவுள்ளது. இதற்கான வர்த்தமானியை ஜனாதிபதி வெளியிட்டிருந்தார்.

நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த சபாநாயகர், நாடாளுமன்றத்தில் ஒரு தரப்பு பெரும்பான்மையை நிரூபிக்கும் வரையில், ஏற்கனவே இருந்த கட்டமைப்பே பின்பற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் நாடாளுமன்றத்தின் அலுவலர்கள், ஜனாதிபதியின் அறிவுறுத்தல் அடிப்படையிலேயே செயற்படுவார்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது, அதன் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் இன்னும் தங்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை என்று நாடாளுமன்றத்தின் பிரதிச் பொதுச் செயலாளர் நீல் இந்தவெல தெரிவித்துள்ளார். (இ-7)

# ரோகித் 'சுப்பர் சதம்'

## தொடரை வென்றது இந்தியா

மே.தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது 'ரி20' போட்டியில் இந்திய அணி 71 ஓட்டங்களால் 'சுப்பர்' வெற்றி பெற்றது. பொறுப்புத் தலைவர் ரோகித் சர்மா 61 பந்துகளில் 111 ஓட்டங்கள் விளாசி அசத்தினார்.

இந்தியா சென்றுள்ள மே.தீவுகள் அணி (அதிகாரப்பூர்வமாக விண்டீஸ்) மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது. கொல்கத்தாவில் நடந்த முதல் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி 1-0 என தொடரில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் இரு அணிகள் மோதிய இரண்டாவது போட்டி நேற்று லக்னோ, எகனா மைதானத்தில் நடந்தது.

**புவனேஷ்வர் வருகை**

நாணயச்சுழற்சியில் வென்ற மே.தீவுகளின் அணித் தலைவர் பிராத்வைட், களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் உமேஷ் யாதவ் நீக்கப்பட்டு புவனேஷ்வர் குமார் சேர்க்கப்பட்டார். மே.தீவுகள் அணியில் ராவ்மென் பாவெலுக்குப் பதில் நிக்கோலஸ் பூரன் இடம்பெற்றார்.

**நல்ல ஆரம்பம்**

இந்திய அணிக்கு ஷிகர் தவான், ரோகித் சர்மா ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ஒசானே தோமஸ் வீசிய முதல் ஓவரில் ரோகித் சர்மா ஓட்டம் எதுவும் எடுக்காமல் போக, 'மெய்டனாக' அமைந்தது. அடுத்த இரு ஓவர்களில் இந்திய வீரர்கள் நிதானம் காட்டினர். பின் பியர்ரே பந்தில் இப்போட்டியின் முதல் பவுண்டரி அடித்த ரோகித், தோமஸ் பந்தை சிக்சருக்கு அனுப்பினார். தவான் தன் பங்கிற்கு தோமஸ் ஓவரில் இரண்டு பவுண்டரிகள் விளாசினார். முதல் நான்கு ஓவரில் 20 ஓட்டங்கள் மட்டும் எடுத்த இந்திய அணி அடுத்த இரு ஓவரில் 29 ஓட்டங்கள் குவித்தது.

6.1 ஓவர்களில் அணியின் ஓட்டஎண்ணிக்கை 50ஐ எட்டியது. பிராத்வைட் 9ஆவது ஓவரை வீசினார். முதல் பந்தில் தவான் ஒரு பவுண்டரி அடித்தார். இதே ஓவரில் ரோகித், ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி என ஓட்ட மழை பொழிய இந்திய அணி 10 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 83 ஓட்டங்கள் எடுத்தது.

**சுப்பர் சதம்**

தொடர்ந்து மிரட்டிய ரோகித், பேபியன் அலன் ஓவரில் அடுத்தடுத்து இரு சிக்சர் அடித்தார். முதல் விக்கெட்டுக்கு 123 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சிக்சருக்கு ஆசைப்பட்ட தவான் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரிஷாப் பன்ட் 5 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார்.

ரோகித்துடன் லோகேஷ் ராகுல் இணைந்தார். பியர்ரே ஓவரில் அடுத்தடுத்து சிக்சர், பவுண்டரி என அடித்தார் ரோகித். பிராத்வைட் வீசிய கடைசி ஓவரில் அடுத்தடுத்து பவுண்டரி அடித்த ரோகித், சர்வதேச 'ரி20' அரங்கில் நான்காவது சதம் அடித்தார்.

20 ஓவர்களில் இந்திய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்கள் எடுத்தது. ரோகித் (111), ராகுல் (26) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**கலீல் கலக்கல்**

பின், களமிறங்கிய மே.தீவுகள் அணிக்கு ஹோப், ஹெட்மயர் ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. கலீல் வீசிய இரண்டாவது ஓவரில் ஹோப் (6) போல்டானார். தொடர்ந்து மிரட்டிய இவரிடம் ஹெட்மயரும் (15) சிக்கினார்.

**குல்தீப் 'இரண்டு'**

தனது முதல் ஓவரை வீசிய குல்தீப், இரட்டை அடி கொடுத்தார். 3ஆவது பந்தில் பிராவோ (23), கடைசி பந்தில் பூரனை (4) அவுட்டாக்கினார். பும்ரா 'வேகத்தில்' பொலார்ட் (6) வீழ்ந்தார். புவனேஷ்வர் தன் பங்கிற்கு ராம்தினை (10) வெளியேற்றினார். அடுத்து வந்த பேபியோ அலன் (0) ரன் அவுட்டாக இந்திய அணியின் வெற்றி உறுதியானது. கடைசி நேரத்தில் குல்தீப் ஓவரில் கீமோ (20) போல் சிக்சர்களாக விளாசியபோதும் தோல்வியை தவிர்க்க முடியவில்லை.

மே.தீவுகள் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. பிராத்வைட் (15), தோமஸ் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி 2-0 என்ற முன்னிலையுடன் தொடரை கைப்பற்றியது. இந்தியா சார்பில் பும்ரா, புவனேஷ்வர், குல்தீப், கலீல் தலா 2 விக்கெட் சாய்த்தனர்.


சதமடித்த மகிழ்ச்சியில் ரோகித்

**ஹோலியை முந்தினார்**

இப்போட்டியில் 111 ஓட்டங்கள் எடுத்த ரோகித் சர்மா, சர்வதேச 'ரி20' அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர்களில் ஹோலியை (62ல் 2,102 ஓட்.) முந்தி 'நம்பர் 1' வீரர் ஆனார். இவர் 86 போட்டிகளில் 2,203 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

◈ தவிர சர்வதேச 'ரி20' அரங்கில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார். முதலிடத்தில் நியூசிலாந்தின் கப்டில் (75ல் 2,271 ஓட்.) உள்ளார்.

◈ இந்திய அணிக்காக சர்வதேச 'ரி20'ல் ஒரு போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்தவரும் ரோகித் தான். இவர் 118, (இலங்கை, 2017, இந்தூர்), 111 (மே.தீவுகள், 2018, லக்னோ) ஓட்டங்கள் எடுத்துள்ளார். லோகேஷ் ராகுல் (110 ஓட்.) அடுத்து உள்ளார்.

**அடுத்து சென்னையில்...**

இந்தியா - மே.தீவுகள் அணிகள் மோதும் மூன்றாவது 'ரி20' போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கிறது.

**சாதித்த ஜோடி**

சர்வதேச 'ரி20' அரங்கில் எந்த ஒரு விக்கெட்டுக்கும் அதிக ஓட்டங்கள் எடுத்த ஜோடி என்ற பெருமையை இந்தியாவின் ஷிகர் தவான், ரோகித் சர்மா பெற்றனர். இவர்கள் 39 போட்டியில் 1268 ஓட்டங்கள் எடுத்துள்ளனர். அடுத்த இடத்தில் அவுஸ்திரேலியாவின் வோர்னர், வோட்சன் ஜோடி உள்ளது. இவர்கள் 37 போட்டிகளில் 1154 ஓட்டங்கள் எடுத்துள்ளனர்.

◈ இதேபோல சர்வதேச 'ரி20' அரங்கில் ஷிகர் தவான், ரோகித் சர்மா இணைந்து முதல் விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் எடுத்த ஜோடி என்ற பெருமை பெற்றனர்.

**23 பந்துகள், 61 ஓட்டங்கள்**

இப்போட்டியில் ரோகித் முதலில் சந்தித்த 38 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்த 23 பந்துகளில் 61 ஓட்டங்கள் விளாச 61 பந்துகளில் 111 ஓட்டங்கள் குவித்தார்.

**22**

லக்னோ, எகனா மைதானத்தில் நேற்று முதன்முறையாக சர்வதேச 'ரி20' போட்டி நடந்தது. இது, இந்திய மண்ணில் சர்வதேச 'ரி20' போட்டி நடந்த 22ஆவது மைதானம் ஆனது.

◈ இங்கு 49,950 பேர் அமர்ந்து போட்டியை பார்த்து ரசிக்கலாம்.

## மீண்டது இங்கிலாந்து

இலங்கை அணிக்கு காலி டெஸ்டில் 'அறிமுக' போக்ஸ்., கர்ரன் கைகொடுக்க இங்கிலாந்து அணி சரிவிலிருந்து மீண்டது.

இலங்கை வந்துள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இத்தொடரின் முதல் டெஸ்ட் காலியில் நேற்று ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**அதிர்ச்சி ஆரம்பம்**

இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. லக்மல் 'வேகத்தில்' அறிமுக வீரர் ரோரி பேர்ன்ஸ் (9), மொயீன் அலி (0) ஆட்டமிழந்தனர். டில்ருவன் பெரேரா 'சுழலில்' ஜென்னிங்ஸ் (46), ஸ்ரோக்ஸ் (7) ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் ரூட் (35), பட்லர் (38) ஜொலிக்கவில்லை. இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுக்களை 164 ஓட்டங்களுக்கு இழந்து தடுமாறியது.

**போக்ஸ் அரைச்சதம்**

அடுத்து இணைந்த அறிமுக வீரர் பென் போக்ஸ், சாம் கர்ரன் அணியை சரிவிலிருந்து மீட்க போராடினர். 7ஆவது விக்கெட்டுக்காக 88 ஓட்டங்கள் சேர்த்தபோது, கர்ரான் (48) ஆட்டமிழந்தார். போக்ஸ் அரைச்சதம் அடித்து நம்பிக்கை கொடுத்தார். ரஷித் 35 ஓட்டங்களில் 'பெவிலியன்' திரும்பினார்.

முதல் நாள் ஆட்ட நேர நிறைவில், இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுக்களை இழந்து 321 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. போக்ஸ் (87), லீச் (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


இறுதி டெஸ்டில் களம்கண்ட இலங்கையின் சுழல் சூறாவளி ரங்கன ஹேரத்துக்கு மரியாதை செலுத்தும் இலங்கை வீரர்கள்

## 17 ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் வெற்றி

## சிம்பாப்வே அபாரம்

டெஸ்ட் அரங்கில் 17 ஆண்டுக்குப் பின் அந்நிய மண்ணில் முதல் வெற்றியை பதிவு செய்தது சிம்பாப்வே அணி. இவ்வெற்றியை பங்களாதேசுக்கு எதிரான முதல் டெஸ்டில் 151 ஓட்டங்களால் ஈட்டிய வெற்றி மூலம் சாதித்தது.

பங்களாதேசுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணி. அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் ஹெட்டில் முதல் டெஸ்ட் சில் நடந்தது. இன்னிங்சில் சிம்பாப்வே 282, பங்களாதேஷ் 143 ஓட்டங்கள் எடுத்தன.

சிம்பாப்வே அணி இரண்டாவது இன்னிங்சில் 181 ஓட்டங்கள் எடுத்தது. 321 ஓட்டங்கள் இலக்குடன் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர நிறைவில்,விக்கெட் இழப்பின்றி 26 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**'சுழல்' தாக்குதல்**

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. சிம்பாப்வே 'சுழல்' வலையில் பங்களாதேஷ் வீரர்கள் வரிசையாக சிக்கினர். சிக்கந்தரிடம், லிட்டன் (23) சிக்கினார். மொமினுல் ஹக் 9 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார். மீண்டும் வந்த சிக்கந்தர் இம்முறை இம்ருல்(43), அணித்தலைவர்மகமதுல்லாவை (16) வெளியேற்றினார். மவுட்டா 'சுழல்' வலையில் நஜ்முல் (13), முஷ்பிகுர் (13), மெகதி (7) சரணடைந்தனர். மற்றவர்களும் விரைவில் திரும்ப.

பங்களாதேஷ் அணி 169 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 151 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.

பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பில் அதிகபட்சமாக சிக்கந்தர் 3, மவுட்டா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இரண்டாவது டெஸ்ட் டாக்காவில் வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகிறது.

**நீண்ட இடைவெளி**

கடந்த 2011ல் சிம்பாப்வே அணி பங்களாதேஷ் மண்ணில் சிட்டகொங் டெஸ்டில் வெற்றி பெற்றிருந்தது. இதன்பின் 17 ஆண்டுக்குப்பின் தற்போதுதான் அந்நிய மண்ணில் முதல் டெஸ்ட் வெற்றி பெற்றது. தவிர சிம்பாப்வே அணி 2013, ஹராரே டெஸ்டில் பாகிஸ்தானை 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இருந்தது. தற்போது 5 ஆண்டுக்குப்பின் டெஸ்ட் போட்டியில் முதல் வெற்றி பெற்றது.


4 விக்கெட்டை கொய்த சிம்பாப்வேயின் மவுட்டா

# மாகாணத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு எதிராக சர்வதேசம் ஏன் குரல் கொடுக்கவில்லை

## சிவில் பிரதிநிதிகளிடம் விமல் வீரவன்ச கேள்வி

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பது மேற்குலக நாடுகள் உட்பட அனைவரும் அறிந்த விடயமாகும். எனினும் தற்போது அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளதாகவும் ஜனநாயகத்தை பாதுகாப்பதாகவும் கூறி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் சிவில் அமைப்புக்கள், மக்கள் விடுதலை முன்னணி, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஜனாதிபதியை விமர்சிக்கும் சர்வதேச நாடுகள் ஏன் மாகாண சபை தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு எதிராக குரல் கொடுக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மக்கள் பேரணியில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.



சபாநாயகர் கருஜெயசூரிய இவ்வாறு பக்கச் சார்பாக தொடர்ந்தும் செயற்படுவாராக இருந்தால் இறுதியில் விவசாயத்திற்கு செல்ல வேண்டிய நிலைமையே ஏற்படும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காண்பிக்குமாறு அவர் தெரிவித்து வருகின்றார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனுடைய பெரும்பான்மையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மாத்திரம் காண்பித்தால் போதுமானது. சபாநாயகருக்கு காண்பிக்க வேண்டிய அவசியமில்லை.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் 113 பெரும்பான்மை உறுதிப்பட்டுள்ளது. அடுத்த பாராளுமன்ற அமர்வு கூடும் முன்னர் அது 125 ஆக அதிகரிக்கும் என விமல் வீரவன்ச தெரிவித்தார். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா PR உடைய 1988.10.21 இல் சதயநட்சத்திரம், கும்பராசியில் பிறந்த கிரகபாவம் 61 (வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்) உயரம் 5' 6'' உடைய மணமகனுக்கு நற்குணமுடைய அழகிய படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (மணமகன் கொழும்பில் உள்ளார்)

தொடர்பு:- 077 978 0205

(கந்தை) (6329)



## தசாக கிரஹயக்ஞ அழைப்பு

விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 12 ஆம் நாள் (29.10.2018) திங்கட்கிழமை அமரத்துவம் எய்திய எமது சகோதரன்

### சிவஸ்ரீ சிவசாமிக்குருக்கள் கமலநாதசர்மா

அவர்களின்

தசாகாதி கிரஹயக்ஞ கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**07.11.2018 புதன்கிழமை தசாகம் காலை 9.00 மணிமுதல்**

**08.11.2018 வியாழக்கிழமை ஏகோதிஷ்டம்**

**09.11.2018 வெள்ளிக்கிழமை சபிண்டீகரணம்**

**10.11.2018 சனிக்கிழமை மதியம் 12.00** மணிமுதல் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் கிரஹயக்ஞமும் (மதிய போசனம்) நடைபெறும். அனைவரும் மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

(6354)

**இடம்:- இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நீராவியடி, யாழ்ப்பாணம்.**

74, பிறவுன் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம். 077 280 2627

இங்ஙனம்
குடும்பத்தினர்.



# இணுவில் கந்தசுவாமி கோவில் சத்துரு சங்கார திரிசதி ஹோமமும்

## கந்தசஷ்டி பெருந்திருவிழாவும் (08.11.2018– 14.11.2018)

உலகின் சகல ஜீவராசிகளையும் படைத்தும் காத்தும் அழித்தும் உலக இயக்கத்தை நிகழ்த்தி வருகிறான் இறைவன். தன்பாலும் தான் படைத்த உயிர்கள் பாலும் அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் இறைவனிடம் எமது சுயநலன்களுக்காக செய்யும் பிரார்த்தனைகளைத் தவிர வேறு எதையும் இறைவனுக்காக நாம் செய்வதில்லை. அந்தக் குறையைத் தீர்ப்பதற்காக செய்யப்படுவதே ஹோமங்கள் ஆகும். முற்காலங்களில் உலக நன்மைக்காகவும் இறைவனாக நாம் காணும் இயற்கையைக் குளிர்விப்பதற்காகவுமே ஹோமங்கள் நடாத்தப்பட்டு வந்தன. ஆயினும் இன்று தனிப்பட்டவர்களின் நலனுக்காகவும் ஹோமங்கள் ஆற்றப்பட்டு வருகின்றன. ஹோமங்களின் போது பல்வேறு இயற்கைப் பொருட்களைக் கொண்டு வளர்க்கப்படும் அக்கினியிலிருந்து வெளிவரும் புகையானது காற்றில் கலந்து அந்தச்சூழல் முழுவதுமாக பரவி இயற்கையில் ஒரு சுகந்தத்தை, மாற்றத்தைக் கொடுக்கின்றது. இக்கருத்தை நவீன விஞ்ஞானமும் ஏற்றுக்கொண்டுள்ளது. அதுமட்டுமல்லாது ஹோமங்களின் போது உச்சரிக்கப்படும் பல்வேறுபட்ட மந்திரங்களின் ஒலி அசைவுகள் அந்தக் கோமம் எதற்காகச் செய்யப்படுகிறது என்ற நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதாக அமைந்துள்ளது.

முருகனுடைய ஷடாசர மூல மந்திரத்தை மாற்றி மாற்றி உருச் செபித்து ஆறு உருவத் தோற்றத்தையும் மனக் கண்முன்னே நிறுத்தி நிகழ்த்தப்படுகின்ற சத்ரு சம்ஹார ஹோமமானது வசீயம், மோகனம், ஆகர்ஷணம், ஸ்தம்பனம், உச்சாடனம், மாரணம் ஆகிய ஆறு வகையான செயல்களையும் கைகூட வைக்கும் தகைமை வாய்ந்தது. இவை மட்டுமன்றி ஒவ்வொருவரும் தமது உடலில் இருக்கும் நோய் பிணிகளிலிருந்து விடுபட்டு நீண்ட ஆயுள் ஆரோக்கியங்களை அடைவதுடன் தமது மனத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் சத்துருக்களாகிய அகங்காரம், மமகாரம், காமக்ரோதம், பொறாமை, வஞ்சகம், சூது முதலானவற்றை அடியோடு சம்ஹரித்து புனிதர்களாக பக்தனை மாற்றி இதயக் கோவிலுக்குள் முருகப் பெருமான் ஞானப்பிரகாசமாக நினைத்த சன்மார்க்கத்தை நிறைவேற்றும் ஆற்றலைத் தருவார் என்பது உறுதி.

எனவே இக்கந்தசஷ்டி காலமாகிய இப்புண்ணிய காலத்தில் முருகப் பெருமானுடைய சந்நிதியில் நடைபெறும் ஹோம வழிபாட்டிலும் கலந்து பேரானந்தத்தில் அமிழ்த்தும் சிவ சாகித்திய முக்திப் பேற்றை அனைவரும் பெறுவோமாக.

"சர்வே ஜனாஹா சுகினோ பவந்து"

இங்ஙனம்

தர்மகர்த்தா சபை,

இணுவில் கந்தசுவாமி கோவில்.

(6356)


# இராசி பலன்

**மீனம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**மேடம்:** பொன்னான நாள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலன் சீராகும், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழித் தகவல்களால் மகிழ்ச்சியடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**கும்பம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறும் வாய்ப்புண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | இராசி பலன் — கிரகநிலை, சந்திராஷ்டமம் ரேவதி, அச்சுவினி | | ராகு |
| கேது | | | |
| சனி | குரு.புத | சூரி, சந், சுக் | |

**07.11.2018**

ஐப்பசி 21, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

அமாவாசை முன்னிரவு 10.14 மணிவரை

சுவாதி முன்னிரவு 8.44 மணிவரை

சுபநேரம் 4.35-6.05 மணிவரை

இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

கேதாரகௌரி விரதம் நிறைவு

அமாவாசை விரதம்

வளவன்

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** ஆடம்பரப் பொருட்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும், நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** சயன சுகக் குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**துலாம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் கூடும் நாள், தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கன்னி:** தொழில் வளர்ச்சிக்கு மங்கையர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், பகைவர்கள் விலகுவர், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

# நிபுணர்களின் ஆலோசனைகளைப்பெற்று தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சபையில் நிறைவேற்றப் படும் சில தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியா மல் இருக்கும் பட்சத்தில் அதனை அந்தந்த துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோ சனைகளைப் பெற்று நடை முறைப்படுத்த வேண்டும் என சாவகச்சேரி நகர சபை யின் மூத்த உறுப்பினர் கந்தையா வேலாயுதபி ள்ளை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபைகளில் எடுத்த தீர் மானங்களை நிறைவேற் றாமல் தொடர்ந்து தீர்மானங் களை அடுக்கிச் செல்வதில் எந்த அர்த்தமும் இல்லை. சபைகளுக்கு நிதி ஒரு பிரச் சினையாக இருந்தாலும் சிறிய சிறிய தீர்மானங் களையாவது நடைமுறைப் படுத்த வேண்டும். சிறிய வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்தாத சபைகள் பாரிய வேலைத் திட்டங்களைச் செய்யுமா என்று சந்தேகமாகவுள்ளது. தீர்மானங்களை நிறை வேற்றுவது தொடர்பாக திணைக்களங்களுக்கோ அல்லது வேறு தரப்பினரு க்கோ கடிதம் அனுப்பி விட்டு இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. உரிய தரப்பிற்கு தொடர் அழுத்தங்களைக் கொடுத்து முயற்சி செய் வதன் ஊடாகவே வேலைத் திட்டங்களை நடை முறைப் படுத்த முடியும். சில விடய ங்களை நடைமுறைப்ப டுத்த முடியாமல் உள்ள தென்றால் அதனை துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்று நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். சபைக ளில் நிதி ஒரு பிரச்சினை யாக உள்ளது.

அதனை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதற்காக எல்லா வேலைத் திட்டங் களையும் முடக்கி விட முடி யாது. அதனைத் தவிர சாவ கச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் காண ப்படும் சட்டபூர்வமற்ற கட்ட டங்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண் டும் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)




# தமிழருக்கு நிரந்தரத் தீர்வு வேண்டி திருமுறை சிவவேள்விப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு நிரந் தரத் தீர்வு வேண்டியும் உலக அமைதி வேண்டியும் திரு முறை சிவவேள்விப் பெரு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 12 நாட்கள் அளவெட்டி ஆறுமுக நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பன்னிரு திரு முறைகள், கந்தபுராணம் , திருப்புகழ் முற்றோதல்,சிவ மூல மந்திர ஓதல் இரவு பகலாக தொடர்ந்து நடை பெறும். (இ)



அரியாலை ஸ்ரீமுத்து வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட தேவார மனனப் போட்டி சமய அறிவு போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பரிசில் பெற்ற மாணவர்கள், விருந்தினர்களைப் படத்தில் காணலாம்.

அகில இலங்கை விஜய் நற்பணி மன்றத்தினால் 'மரம் நடுவோம் பசுமையை காப்போம்' என்ற தொனிப்பொருளில் 650 தென்னங்கன்றுகள் பயனாளிகளுக்கு வழங் கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

சர்கார் திரைப்படத்தை வரவேற்கும் முகமாக அகில இலங்கை விஜய் நற்பணி மன்றத்தினால் தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலையத்தின் ஊடாக அப்பிரதேச மக் களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

(படங்கள்: ஐ. சிவசாந்தன்)







# ஒன்றரை இலட்சம் ரூபா பணம் பெண்ணிடமிருந்து வழிப்பறி!

(கரணவாய்)

வங்கியிலிருந்து எடுத் துச் செல்லப்பட்ட பணம் கொள்ளையர்களால் பறி த்துச் செல்லப்பட்டதாக வல் வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயி ற்றுக்கிழமை நெல்லியடி யிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் பெண் ஒருவர் ஒன்றரை இலட்சம் ரூபா பண த்தை எடுத்துக் கொண்டு வீடு நோக்கிச்சென்று கொண் டிருந்த போது மாலை 6.30 மணியளவில் இமையா ணன் பகுதியில்வைத்து மோட் டார் சைக்கிள் ஒன்றில் வந் தவர்களால் பணம் இருந்த கைப்பை பறித்து செல்ல ப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வல் வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகி ன்றனர் . (இ-60)

# ஆசிரியர் சங்க கலந்துரையாடலும் நிர்வாக சபைத் தெரிவும் இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங் கத்தின் கலந்துரையாட லும் நிர்வாக சபைத் தெரி வும் இன்று 7 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். மருத னார்மடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்ட பத்தில் நடைபெறும்.

இதில் அதிபர்கள், ஆசிரி யர்கள் எதிர்நோக்கும் சம் பள முரண்பாடுகள் பதவியு யர்வுகள், இடமாற்றம் தொட ர்பாக கலந்துரையாடலும் வலிகாமம் கல்வி வலய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறும். (இ)

# எரிகொட்டகை கூரைத்தகரம் புதிதாக மாற்றப்பட வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிண முருங்கை மயான எரிகொட் டகையின் கூரைத்தகரம் புதிதாக மாற்றம் செய்யப்பட வேண்டுமென சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேலு பிரதேச சபைத் தவிசாளரிடம் கோரி க்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி உப பணி மனை பகுதியில் நாவற்குழி கிழக்கு ஜே/295 கிராம உத் தியோகத்தர் பிரிவில் அமை ந்துள்ள பிணமுருங்கை மயான எரிகொட்டகைத் தகரங்கள் நீண்ட காலமாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இம் மயானம் நாவற் குழி கிழக்கு ஜே/295, கோவிலாக்கண்டி ஜே/296 ,கைதடி நாவற்குழி ஜே/ 297 கிராம உத்தியோக த்தர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும் பங்களுக்கான ஒரே ஒரு இந்து மயானமாகும்.

ஆகவே எதிர்வரும் கால ங்களில் இவ் எரி கொட்ட கையை புனரமைக்க நிதி ஒதுக்க ஆவன செய்யப்பட வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# கந்தசஷ்டி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி செல்லக்கதிர் காம சுவாமி திருக்கோவில் கந்தசஷ்டிப் பெருவிழா நாளை 8 ஆம் திகதி வியா ழக்கிழமை தொடக்கம் எதிர் வரும் 13 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை வரை 6 நாட்கள் நடைபெறும். இதில் ஆறாம் நாள் பிற்பகல் 3 மணியளவில் சூரசம்ஹா ரம் நடைபெறும். (இ)

# 'பிளாஸ்ரிக் கழிவுகள் கடலுக்குள் செல்லாமல் தடுத்தல்'









வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் (VOGT) "பிளாஸ்ரிக் கழிவுகள் கடலுக்குள் செல் லாமல் தடுத்தல்" என்ற தொனிப்பொருளில் மேற் கொள்ளப்படும் செயற்றிட்டத்தில் முதலாவது செயற் பாடாக கடந்த 4 ஆம் திகதி மூர்க்கம் கடற்கரை சுத்தமாக்கப்பட்டது. இதில் கிராம மக்கள், வடமராட்சி நல்லொழுக்க ஊழியர்கள், இளைஞர் கள், நகரசபை உறுப்பினர் மற்றும் சமூக ஆர் வலர்கள் கலந்து கொண்டனர்.

ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி (USAID) நிறுவன நிதி உதவியுடன் அபிவிருத்திக்கான உதவி ஊக்க இலங்கை மையத்தின் (SLCDF) அனுசரணையுடன் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தினால் (VOGT) பருத்தித்துறை, வல் வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் இச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.





தீபாவளியை முன்னிட்டு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுக் காலை சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. இதில் பெருமளவான பக்தர்கள் பங்கேற்றனர். இதேவேளை வெளிநாட்டவர்கள் பலரும் நல்லூரில் தீபாவளி வழிபாடுகளில் பங்கேற்றிருந்தனர்... (படங்கள் - ஐ.சிவசாந்தன்)

# அரசியல் நெருக்கடிக்குத் தீர்வைக் காண பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டும்

## சபாநாயகரைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர் அலைனா வலியுறுத்து

(கொழும்பு)

புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திடீரென நியமித்ததையடுத்து இலங்கை எதிர்கொண்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கு பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டுமென அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் சபாநாயகர் கரு ஜெயசூரியவை சந்தித்துள்ளார்.

அலைனா டெப்லிட்ஸ் தனது டுவிட்டர் பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக பாராளுமன்றத்தினை கூட்ட வேண்டியதன் அவசியத்தை சபாநாயகரிடம் வலியுறுத்தினேன் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஸ்தாபனங்கள் இலங்கை மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என தெரிவித்துள்ள அமெரிக்க தூதுவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்கள் தீர்மானங்களை எடுப்பதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கருஜெயசூரிய கடும் அழுத்தங்களை சந்தித்து வரும் நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-14, அத்தியடி ஒழுங்கை ஆதன இல. 57 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் வல்லிபுரம் பெண் ராசம்மா என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை காங்சேன்துறையைச் சேர்ந்த பொன்னையா சோமசுந்தரமும் பெண் இராஜேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு வே.சதாசிவம் முகதாவில் 1980.12.12 ஆம் திகதியிட்டு 12400 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சீதன உறுதியில் இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு சி.கா.ஆபிரகாம் முகதாவில் 1916.02.04 ஆம் திகதியிட்டு 8260 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதிப்படி தங்களில் 1 ஆம் பேரின் மாதாவினதும் பெரிய மாதாவினதும் சொந்தமும் ஆட்சியுமாகும் என்றும் அவர்கள் விருப்பாவணமின்றி இறக்க தமது முதுசமும் ஆட்சியுமானதென வெளிப்படுத்தி அருணாச்சலம் தெட்சணாமூர்த்தி பெண் சுந்தரேஸ்வரிக்கு சீதனமாக வழங்கியுள்ளனர். பொன்னையா சோமசுந்தரமும் பெண் இராஜேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு க.திருநாவுக்கரசு முகதாவில் 1988.05.20 ஆம் திகதியிட்டு 226 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சி.கா.ஆபிரகாம் முகதாவில் 1916.02.04 ஆம் திகதியிட்டு 8260 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதிப்படி தங்களின் முதலாம் பேரில் மாதாவினும் பெரிய மாதாவினதும் சொந்தமும் ஆட்சியுமாகும் என்றும் அவர்கள் விருப்பாவணமின்றி இறக்க தனது முதுசமும் ஆட்சியுமுடையதும் என்று வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு இரட்ணம் இரகுராஜ் முகதாவில் 2017.10.02 ஆம் திகதியிட்டு 8999 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் 1634 Dewberry crecent, Mississauga, ontariyio, L4W கனடாவைச் சேர்ந்த அருணாச்சலம் தெட்சணாமூர்த்தி பெண் சுந்தரேஸ்வரியும் இல.24 Block Government flats, Bambalapitiya, Colombo-04 சேர்ந்த தம்பி ஐயா கந்தசாமியும் பெண் சுந்தரராணியும் சுந்தரலிங்கம் சுதர்சனுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை "காட்டு வளவு" நில.பர.2.5 உம் காட்டு வளவு நில.பர.3 குளி 0 இவை இரண்டும் சேர்த்து நில.பர.5.5. ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.தங்கராஜா அவர்களின் வரைபட இலக்கம் 9644/2017.09.03 இல் துண்டு- 1 எனக் காட்டப்பட்ட நில.பர 3 குளி 15.64 ஆகும்.

வடக்கு- ஒழுங்கையும், பாக்கியராஜன் காயத்திரியின் ஆதனம்

கிழக்கு:- அத்தியடி ஒழுங்கை

தெற்கு:- ஒழுங்கை

கிழக்கு:- ஒழுங்கை

தற்போது இவ்வாதனத்தை சுந்தரலிங்கம் சுதர்சன் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சுந்தரலிங்கம் சுதர்சன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும்

(இம்மானுவல் ஆனல்ட்)
முதல்வர்,
மாநகரசபை.

(சி-4330)

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-01 பிரதான வீதி, ஆதன இல. 34 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் M.S.சுல்தான் காஜியார் என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை இல. 92, கலீபா அப்துல்காதர் வீதி, யாழ்ப்பாணம். தற்பொழுது இல. 24B, சமகி மாசவத்தை, கௌடான வீதி, தெஹிவளையைச் சேர்ந்த சுல்தான் மொகிதீன் மொகமது றவீக், பிரசித்த நொத்தாரிசு M.M.M.ரமீஸ் முகதாவில் 2004.07.02 ஆம் திகதியிட்டு 577 ஆம் இலக்கத்தில் உறுதிப்படுத்தப்பட்ட உறுதியில், தனது தந்தையார் நையினா மொகமட் சுல்தான் மொகிடீனுக்கு 1964 ஆம் ஆண்டு குறித்த ஆதனம் நன்கொடையாக வழங்கப்பட்டதென்றும், குறித்த உறுதி 1990 இடப்பெயர்வின் போது தொலைந்து விட்டதாக வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு Y.சத்தியநாதன் முகதாவில் 2004.12.28 (4) ஆம் திகதியிட்டு 861 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதி மூலம் சுல்தான் மொகிதீன் மொகமது றபீக், குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, இல 18/8 என்ற முகவரியைச் சேர்ந்த சவரிமுத்து டொமினிக் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, கரையூர் இறை அதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.சுப்பிரமணியம் அவர்களின் வரைபட இல.0467/2004.06.11 இல் துண்டு- 1 எனக் காட்டப்பட்ட நில.பர 1 குளி 12.19 ஆகும்.

வடக்கு:- கண்டி வீதி

கிழக்கு:- தேசிங்கநாதன் பார்த்தீபன்

தெற்கு:- இராசையா இராஜசூரியரின் ஆதனம்

மேற்கு:- கண்டி வீதி 8 ஆம் இலக்க ஆதனம்,

தற்போது இவ்வாதனத்தை சவரிமுத்து டொமினிக் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சவரிமுத்து டொமினிக் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இம்மானுவல் ஆனல்ட்)
முதல்வர்,
மாநகரசபை.

(சி-4331)

# ஆவாகுழு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததாக கைதான நபர் பிணையில் விடுதலை

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியாவில் ஆவா குழு தொடர்பான துண்டுப் பிரசுரம் விநியோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்ட நபரை பிணையில் செல்ல வவுனியா மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

பொலிஸாரினால் பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மாவட்ட நீதிமன்றம் அவரை விடுதலை செய்து வழக்கை ஜனவரி மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

இந்நிலையில் விடுதலை செய்யப்பட்ட நபர் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் வவுனியா பொலிஸார் தகுந்த ஆதாரங்கள் இன்றி கைது செய்து முறையற்ற விதத்தில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தமை, கைவிலங்கிடப்பட்ட நிலையில் ஏ9 வீதியில் வவுனியா பொலிஸ் நிலையத்திலிருந்து நீதிமன்றம் வரை வீதியில் அழைத்து சென்றமை, செய்யாத குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்தியமை போன்ற செயற்பாட்டால் நான் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளேன் என தெரிவித்தும் என் மீது பொலிஸாரினால் அடக்குமுறை பிரயோகிக்கப்பட்ட நிலையில் எனக்கு நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வைத்திய அதிகாரிக்கு எதிராக விசாரணை

(கண்டாவளை)

வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மாங்குளம் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிக்கு எதிராக விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா கனகராயன்குளத்தில் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகிய நபரொருவருக்கு அச்சந்தர்ப்பத்தில் உரிய சிகிச்சை அளிக்கவில்லை என தெரிவித்து பாதிக்கப்பட்ட கணவன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் வழங்கிய முறைப்பாட்டையடுத்து நேற்று முன்தினம் மாலை விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா கனகராயன்குளத்தில் முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்தினர் மீது 10-10-2018 அன்று கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியின் தலைமையில் சிவில் உடையில் சென்ற பொலிஸார் தாக்குதல் நடத்தியிருந்த நிலையில் பொலிஸாரின் தாக்குதலில் கடுமையாக பாதிப்படைந்த அந்நபருக்கு உரிய முறையில் வைத்தியர் சிகிச்சை வழங்காது பொலிஸாரிடம் மீண்டும் கையளித்தமையால் தனது கணவரை கனகராயன்குளம் பொலிஸார் மீண்டும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கியிருந்தனர்.

எனவே குறித்த வைத்திய அதிகாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்து வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணை முன்னெடுக்கப்பட்டது. விசாரணையின் போது வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் முன்னிலையாகியிருந்தார். (2-315)



வட்டுக்கோட்டை மாணவிகள் இருவருக்கும் ஓர் குடும்பத்தலைவிக்கும் இரண்டு துவிச்சக்கர வண்டியும், ஒரு தையல் இயந்திரமும் வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் சிற்றம்பலம் ஸ்ரீஜீவாவின் கோரிக்கைக்கு இணங்க முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சன குகதாசனின் நிதிப்பங்களிப்புடன் வலி.மேற்கு பிரதெச சபை மண்ட நிகழ்வில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டது.



யாழ்.வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர்கள் தமது வீட்டில் கல்வியை வசதியாக இருந்து கற்பதற்கென நோர்வே நாட்டிலிருந்து வருகை தந்த விஜயரூபன் நான்கு பிள்ளைகளுக்கு மேசை கதிரையை வழங்கி வைப்பதையும் அருகில் அதிபர் ஜே.கோகுலவாசன் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிற்றம்பலம் ஸ்ரீஜீவா ஆகியோரும் காணப்படுவதைப் படத்தில் காணலாம்.

# வவுனியா கந்தசாமி ஆலயத்தில் தீபாவளி வழிபாடு

(குருமன்காடு)

தீபாவளி திருநாள் நிகழ்வுகள் வவுனியா. கந்தசாமி ஆலயத்தில் சிறப்பாக இடம் பெற்றன.

வவுனியா மாவட்ட செயலகமும், இலங்கை தேசிய பாதுகாப்பு படையினரும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது கந்தசாமி ஆலய முன்றலில் இராணுவத்தினர் மற்றும் அரச அதிகாரிகளை வரவேற்கும் நிகழ்வும், ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றதுடன், இராணுவ அதிகாரிகளுக்கு இந்து மத குருமாரால் ஆசியும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா, வன்னி படைத்தள கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வர்த்தக சங்கத் தலைவர் சி.சுஜன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோன், இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)



கிழக்கு மாகாணத்தில் யாழ். மத்திய கல்லூரி உயர்தர மாணவர்கள் 96 பேர் யாழ். எய்ட்டுடன் இணைந்து 10 மாற்றுத்திறனாளிகளான முன்னாள் போராளிகள்,பொதுமக்கள் குடும்பங்களுக்கு நல்லின பசுமாடுகள், ஆடுகள், கைப்பணிப் பொருட்கள் செய்வதற்கான பட்டறைகள், கடைகள்,குளிர்சாதன பெட்டி, மின்சார வசதி போன்ற 12,00000 பெறுமதியான பல உதவிகளை வழங்கி உதவியுள்ளனர்.

# கிளி,சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்கு புதிய பணிப்பாளர்கள் நியமனம்

(பரந்தன்)

கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்கு புதிய பணிப்பாளர்கள் மத்திய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி தள வைத்திய சாலைக்கு நீண்டகாலமாக தகுதி வாய்ந்த பணிப்பாளர்கள் இல்லாமல் இருந்த குறைபாட்டை நீக்கும் முகமாக மருத்துவ நிர்வாக முதுமாணி பயிற்சியை பெற்றுக்கொண்ட வைத்திய கலாநிதி த.மஹேந்திரன் மத்திய சுகாதார அமைச்சினால் சாவகச்சேரி தள வைத்தியசாலைக்கு உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மருத்துவ நிர்வாக முதுமாணி பயிற்சியை பெற்றுக் கொண்ட வைத்திய கலாநிதி தங்கராஜா காண்டீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு நேற்று முன்தினம் ஏறாவூர் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர், கிளிநொச்சி பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான நியமனங்கள் உட்பட நாட்டில் உள்ள 17 வைத்தியசாலைகளுக்கான மருத்துவ நிர்வாகத்துறை நியமனங்கள் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் தத்தமது பணியிடங்களில் இன்று 7 ஆம் திகதி புதன்கிழமையன்று உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி பொது வைத்திய சாலையின் தற்போதைய பணிப்பாளர் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார் எனவும் கடமையேற்கவுள்ள புதிய பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள நியமனம் நிரந்தரமானது எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(2-312-315)




# இடையூறு ஏற்படுத்தும் வகையில் புகைப்பிடித்தவருக்கு அபராதம்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் பொது இடத்தில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக புகைப்பிடித்த ஒருவருக்கு நேற்று முன்தினம் வவுனியா நீதிமன்றத்தினால் ஆயிரம் ரூபாய் அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் பொது இடம் ஒன்றில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் புகைப்பிடித்த நபர் ஒருவரைக் கைது செய்த பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக செயற்பட்ட குற்றத்திற்காக ஆயிரம் ரூபாய் நீதிமன்றத் தண்டம் நீதிபதியினால் விதிக்கப்பட்டு அபராதம் அறவிடப்பட்டுள்ளது. (2-281)

# சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு தண்டப்பணம்

(குருமன்காடு)

மது போதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 25 ஆயிரம் தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன், சாரதி அனுமதிப் பத்திரமும் 9 மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டது.

வவுனியா நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் சென்றபோது போக்குவரத்துப் பொலிஸார் வழிமறித்துள்ள போதும் நிறுத்தாமல் சென்றுள்ளார்.

இதையடுத்து பொலிஸார் குறித்த இளைஞனை துரத்திச் சென்று மறித்த போது மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியதுடன், சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமையும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து அவரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது 25 ஆயிரம் ரூபாய் தண்டம் அறவிடப்பட்டுள்ளதுடன், ஒன்பது மாதம் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டது. (2-250)

# நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஆழ்கடல் தொழிலுக்கு செல்லவில்லை

## -மீனவ அமைப்புக்கள்-

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கூடுதலான கடற்றொழிலாளர்கள் நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக ஆழ்கடல் தொழிகளுக்குச் செல்லவில்லை என்று மீனவ அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்திலும் அது சார்ந்த கடற் பிரதேசங்களிலும் எச்சரிக்கை அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழில்களில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களில் அதிகளவானோர் நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக ஆழ்கடல் தொழில்களுக்குச் செல்லவில்லை என்று மீனவ அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.


இதேவேளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்புகொண்டு வினவிய போது முல்லைத்தீவு பிரதேசத்தில்.கடலில் எந்தவித மாற்றங்களும் இல்லை என்று தெரிவித்துள்ளது. (2-315)



நாடளாவிய ரீதியில் இருந்து ஆலயங்களில் தீபாவளி பண்டிகை விசேட பூசைகள் நேற்று நடைபெற்றன. இதற்கமைவாக மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திலும் கிளிநொச்சி ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகளில் இந்துக்கள் குடும்பம் குடும்பமாக ஈடுபட்டிருந்தனர். இதன்போது நூற்றுக்கணக்கான பக்தர்கள் நெய் விளக்கேற்றி அர்ச்சனைகளைச் செய்தனர். இதேவேளை மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு இந்து ஆலயங்களிலும் தீபாவளி பூசை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

# இரணைதீவு செபமாலை மாதா தேவாலயம் கடற்படையினரால் புனரமைத்து கையளிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி இரணைதீவிலுள்ள செபமாலை மாதா கிறிஸ்தவ தேவாலயம் கடற்படையினரால் புனரமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைதீவில் பூர்வீகமாக வாழ்ந்த மக்தள் கடந்த 1992 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மீளவும் கடந்த மே மாதம் மீள் குடியேறியதையடுத்து சேதமடைந்த நிலையில் காணப்பட்ட இந்த கிறிஸ்தவ தேவாலயத்தை கடற்படையினர் புனரமைத்து பொது மக்களிடம் வழங்கியுள்ளனர்.

கடற்படை பௌத்த சம்மேளன நிதியொதுக்கீட்டின் கீழ் சுமார் 1,117,543.15 ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாண வேலைகள் கடற்படை சிவில் பொறியியலாளர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இப்புனரமைப்பு வேலைத்திட்டங்கள் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (2-315)

## மன்னாரில் பெய்கின்ற கனமழையினால்

# பல்வேறு இடங்களில் நீர் தேங்கி நின்று வெள்ளம்



(மன்னார்)

கடந்த சில நாட்களாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் சீரற்ற கால நிலை காரணமாக பல்வேறு பிரதேசங்களில் கடும் மழை பெய்து வருகின்றது. இதன்காரணமாக தாழ்நில பிரதேசங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் நேற்று இரவு பெய்த கன மழை காரணமாக பல்வேறு பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மன்னாரின் தாழ் நில பிரதேசங்களான சாந்திபுரம், ஜிம்றோன் நகர், எமில் நகர், உப்புக்குளம், எழுத்தூர், இருதயபுரம் போன்ற பிரதேசங்களே மேற்படி நீரில் மூழ்கியுள்ளன.

வீடுகள், வீதிகள், மைதானங்கள் போன்றவை அதிகளவில் நீர் சூழ்ந்துள்ளதால் குறிப்பிட்ட கிராமங்களை சேர்ந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் பாடசாலை மாணவர்கள் காலணிகள் கூட அணிந்து செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. ஒழுங்கான கழிவு நீர் முகாமைத்துவம் இன்மையால் மழை நீரானது வடிந்து செல்ல முடியாத நிலையில் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் நிறைந்து காணப்படுகின்றது.

நீர்வடிகான்கள் சில இடங்களில் குப்பை கூழங்களினால் அடைபட்டிருப்பதனால் கழிவு நீரானது கடலுடன் கலக்க முடியாத நிலை காணப்படுகின்றது.


எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் கழிவு நீருடன் மனித மற்றும் விலங்குளின் கழிவுகள் மற்றும் குப்பைகள் கலப்பதனால் பலரும் தோல் சம்பந்தப்பட்ட தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கழிவுகளை சரியான முறையில் மழை நேரங்களில் அகற்றுவதற்கான ஏற்பாடுகளும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.தொடர்ச்சியாக மழை பெய்யும் பட்சத்தில் பல கிராமங்கள் நீரில் மூழ்கி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவிக்கப்படுகின்றது.(2-285)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஏலக்காய்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஏலத்தில் நான்கு வகைகள் உண்டு

1.சிற்றேலம்- Eletta ria repens

2.பெரிய ஏலம்–Eletta ria cardamomum

3.காட்டு ஏலம்

4.மலை ஏலம்- Amomum subulatum

இவை யாவும் மருத்துவ குணம் மிக்கவை

மலைகளில் ஏராளமாக வளரக்கூடியவை.

நாவறட்சி தாகசுரம் நாடா தகற்றிவிடுந்

தீவறட்சி நீர்க் கருப்பைத் தீர்க்குங்காண் மூவறட்சி

கூடும் அரோசகத்தை கூடாமல் ஒட்டிலி

நாடு மலை யேலம் நவில்

இதனால் நாவறட்சி, வறட்சிசுரம், சொறி, நீர்ச் சுருக்கு, முக்குற்றால் உண்டான வறட்சி இவைகள் போம்.

காட்டு ஏலம்

இது ஈரலிப்பான பிரதேசங்களில் பண் படுத்தப் படாத நிலத்தில் தானாகவே வளரும் செடி.

தீராத வாந்தி சிலேத்ம மதிசாறும்

பேரா அருசி பித்தம் பேருங்காண்ட சேராமல்

காட்டேல வார்குழலே! கபரம் பரிமளஞ்சேர்

காட்டேல மென்றுரைக்குங் கால்

உறையும் மணமுள்ள காட்டு ஏலத்தினால் நீங்காத வாந்தி, கபம், பேதி, சலரோகம், பித்தம் நீங்கும்.

இதனை விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம். இலங்கையில் மத்திய மாகாணத்தில் வளரக்கூடியது. யாழ்ப்பாணத்தில் வளரும் இயல்பு இல்லை.

ஆனாலும் ஏல வகைகளை உலர் கனியாக கடைகளில் வாங்கி மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

பொதுவான வாசனைப் பொருளாகவே சிற்றுண்டிகள், உப உணவுகள், தயாரிக்க பயன்படுத்துகிறார்கள். ஆனாலும் உலர் கனிகளும் விதைகளும் மருந்து தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றது.

ஏலரிசி, ஓமம், சீரகம் ஒவ்வொன்றும் 100 சீரகம் எடுத்து பொடி செய்து கொள்ள வேண்டும். இதில் மூன்று வேளையும் உணவிற்கு பின் 3 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் அஜீரணக் கோளாறுகள் நீங்கும்.

ஏலரிசி, சுக்கு (வேர்க் கொம்பு), கராம்பு சீரகம் ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் 2 கிராம் அளவு எடுத்து தினமும் இரண்டு வேளை சாப்பிட்டால் குடற்புண், வயிற்றுவலி போன்றவை குணமாகும்.

ஏலக்காய் (கனியுறையுடன்) 100 கிராம், வெல்லம் 200கிராம் இரண்டையும் சீரகம் ஒவ்வொன்றும் 50 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் 2 கிராம் அளவு எடுத்து தினமும் இரண்டு வேளை சாப்பிட்டால் குடற்புண், வயிற்றுவலி போன்றவை குணமாகும்.

ஏலக்காய் (கனியு றையுடன்) 100 கிராம், பனை வெல்லம்-200கிராம், இரண்டையும் ஒன்றாக சேர்த்து இடித்து தினமும் 5 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் அடிக்கடி உண்டாகும் தலைவலி, மயக்கம் என்பன தீரும்.

பெரிய ஏலம்

தொண்டை வாய்கவு டாலு குதங்களிற் ஒன்று·நோயதி சாரம்பன் மேகத்தா துண்டை போமெழுந் கட்டி சிரிச்சர முழலை வாந்தி சிலந்தி விடஞ்சுரம் பண்டை வெக்கை விதாகநோய் காசமும் பாழஞ் சோமப் பிணிவிந்து நட்ட முள்ளண்டை யீளைவன் பித்த மிலைக்கெலாமால மாம்பரு மேல மருந்ததே.

பருத்த ஏலமானது வாய்வுக் கோளாறுகள், அரையாப்பு, கட்டி, சிறுநீர் எரிச்சல், உஷ்ணபேதி, இருமல் சுக்கில நாசம், வயிற்றில் கப நிறைவு, நெஞ்சில் கோழை, இரத்த பித்தம் ஆகிய இவ்வித நோய்களை விலக்கும்.

ஏலக்காய்,ஆவாரம்பூ,வேர்க் கொம்பு ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் 5 கிராம் எடுத்து 1/2 லீற்றர் தண்ணீரில் போட்டு பாதியாக சுண்டக்காய்ச்சிக் குடித்தால் (60 மில்லி காலை, மாலை) இதய பலவீனங்களை நீக்கும். இரத்தத்தில் அதிகரித்த கொலஸ்ரோலின் அளவையும் கட்டுப் படுத்தும்.

ஏலக்காய், கொத்தமல்லி, சிறுநெல்லி ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். இதில் ஒரு தேக்கரண்டி பொடியை பசுவின்பால் 200 மில்லியில் கலந்து சாப்பிட்டால் சிறுநீரக கற்கள் கரையும்.

ஏலக்காய் போட்டு கொதிப்பித்த தண்ணீரில் வாய் கொப்பளித்தால் வாய் நாற்றம், பல்லீறுகளில் ஏற்படும் புண் போன்றவை குணமாகும்.

ஏலக்காய், வெள்ளிவிதை ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து பொடி செய்து காலை, மாலை 2 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் நீர் அடைப்பு, கல்அடைப்பு குணமாகும்.

ஏலக்காய், சீரகம் ஒவ்வொன்றும் 50 கிராம் அளவு எலுமிச்சப்பழச்சாறு 100 மில்லியில் ஊறவைத்து காயவிடவும். உலர்ந்ததும் பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை தேனுடன் சாப்பிட்டு வர புளித்த ஏப்பம், வயிற்று எரிவு, வயிற்றுவலி ஆகியன குணமாகும். பித்த மயக்கமும் குணமாகும்.

புதினா இலைகளுடன் ஏலக்காயை பொடித்து 200 மில்லி தண்ணீரில் கொதிக்க வைத்து ஆறிய பின்பு வடிகட்டி காலை, மாலை 2 நாட்கள் சாப்பிட சமிபாடு இன்மை நீங்கி குடல் பலப்படும்.

சீரகம், ஏலக்காய், அதிமதுரம், நெற்பொறி, வேர்க் கொம்பு, உலர்ந்த விளா இலை, மல்லி, பச்சைப் பயறு, சிற்றாமுட்டி வேர் ஆகியவற்றை சம அளவு எடுத்து தூளாக இடித்து 8 மடங்கு நீர்விட்டு 1/8 பங்கை சுண்டக்காய்ச்சி ஆறிய பின்பு வடிகட்டி 60 மில்லி அளவு காலை, மாலை வெறும் வயிற்றில் அருந்தி வர பித்தசம்பந்தமான நோய்கள் வராது. வயிறு உளைச்சலும் குணமாகும்.

ஏலக்காய், எள்ளுப் புண்ணாக்கு, முருங்கைக்கீரை மூன்றையும் காய்ச்சிக் குடித்தால் கண்பார்வை தெளிவாகும்.

ஏலக்காய், அமுக்கிரா ஒவ்வொன்றும் 100 கிராம் அளவு எடுத்து பொடித்து இரவு ஆடை நீக்கிய பசுப் பாலை குடித்து வந்தால் மூட்டுக்களும் நரம்புகளும் பலப்படும்.

# சம்பந்தனை சந்தித்தார் அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)


எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனுக்கும், இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப் லிட்ஸிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸிற்கும் சபாநாயகர் கரு ஜெயசூரியவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இலங்கை எதிர்கொண்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக நாடாளுமன்றத்தினை கூட்ட வேண்டியதன் அவசியத்தை சபாநாயகரிடம் வலியுறுத்தியதாக அலைனா குறிப்பிட்டுள்ளார். (இ-7)



தீபாவளி திருநாளை முன்னிட்டு சண்டிலிப்பாய் வீணாகான குரு பீட சரஸ்வதி உபதேச திருக்கோவிலில் நேற்று உறியடி போட்டி நிகழ்வு இடம்பெற்றது.



முன்னாள் சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டீ. ஏ. ராஜபக்ஷவின் 51 ஆவது நினைவு தினம் தங்கல்லை நகரில் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## பேராசிரியர் சத்தியசீலனுக்கு

# 'தேச நேத்ரு' விருது வழங்கிக் கௌரவிப்பு

(கொழும்பு)

தனது காத்திரமான படைப்புக்கள் மூலம் சமூக நல்லிணக்கத்தை உருவாக்கவும் இலங்கையின் கலாசார அடையாளங்களை பேணிப் பாதுகாக்கவும் வரலாற்று புலத்தினூடாக தகைசார் பேராசிரியர் ச.சத்தியசீலன் வழங்கிய பங்களிப்பை அங்கீகரித்து "தேச நேத்ரு" (தேசத்தின் கண்கள்) என்ற விருது கடந்த 2 ஆம் திகதி அம் பாந்தோட்டை வலஸ் முல்ல




தேசிய பாடசாலையில் இடம்பெற்ற தேசிய இலக்கிய விழாவில் உயர் கல்வி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் வழங்கப்பட்டது.

(இ-9)

# 'அரசியல் மாற்றம் ஒரு சதி'

# இரண்டு பிரதமர்களுக்கும் எமது வாக்குகள் இல்லை

## ஜே.வி.பி.தலைவர் உறுதி



(கொழும்பு)

இரு பிரதமர்களுக்கும் தமது வாக்குகளை பயன்படுத்த மாட்டோம் எனவும், அரசியல் சதி முயற்சிகளை தோற்கடிப்பதற்காக தமது வாக்குகளைப் பாராளுமன்றத்தில் பயன்படுத்தவுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரசியல் மாற்றம் ஒரு சதி முயற்சியாகும். பாராளுமன்றத்தை ஒத்தி வைத்ததும் அதற்காகவே ஆகும். இதனை தோற்கடிப்பதற்கு பாராளுமன்றத்தைக் கூட்டியவுடன் தமது வாக்குகளைப் பயன்படுத்தவுள்ளதாகவும் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் புதிய அரசியல் கொள்ளைப் பிரகடனத்துக்கு எதிராகவும், அரசியல் அமைப்புக்குப் புறம்பாக வழங்கப்பட்டுள்ள நியமனத்துக்கு எதிராகவும், புதிய அரசாங்கத்தினால் வரவு-செலவுத் திட்டம் முன் வைக்கப்பட்டால் அதற்கு எதிராகவும் வாக்களிக்க தயாராகவுள்ளோம்.

இந்த அரசியல் சதி முயற்சிக்கு எதிராக ஒன்றுபடுமாறு நாம் பொதுமக்களை கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் அரசியல் குழப்பம் தீவிரம்! மீண்டும் நாடாளுமன்ற அமர்வில் சிக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றத்தை திறந்த பின்னர் மீண்டும் 5 நாட்களுக்கு நாடாளுமன்றத்தை பிற்போடுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக முன்னாள் பிரதி சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தை கூட்டும் நாளில் மேற்கொள்ள கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவாக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முதலாவதாக நாடாளுமன்றத்தை கூட்டிய பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் முறை தொடர்பில் தெளிவுபடுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

14ஆம் திகதி மாலை 12 பேரை கொண்ட நிலையான செயற்குழு ஒன்று நிறுவப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ராஜிதவுக்கு எதிராக வலுக்கும் எதிர்ப்பு

# ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டின் சுகாதாரத் துறையில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஜனாதிபதிஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஔடத கொள்வனவிற்கான கேள்வி அறிவித்தல் நடைமுறையின் போது 700 இலட்சம் ரூபாய் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக, அந்தச் சங்கத்தின் பேச்சாளர் வைத்தியர் சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (இ-7)

# மீண்டும் பாரிய போராட்டத்திற்கு தயாராகும் ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

நாளை எட்டாம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புப் போராட்டமொன்றை நடத்தவுள்ளது. நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டுமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சியால் இந்தப் போராட்டம் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்றை அவசரமாகக் கூட்டி நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டுமாறு வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப்போராட்டம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தகவல் வெளியிட்டுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


இணுவில் இந்து
31 ஆம் நாளில் நினைவு கூருகின்றது


எமது கல்லூரியின் சமயபாட ஆசிரியை
திருமதி. யமுனா-பகீரதன் அவர்களின் தாயார்
திருமதி.சத்தியேஸ்வரி
சோமசுந்தரம்
(நயினாதீவு, 5ம் வட்டாரம்)
காலமான செய்தியறிந்து ஆழ்ந்த
துயருருகின்றோம். அன்னாரின் குடும்பத்திற்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு 31
ஆம் நாளில் ஆத்மாசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம் இணுவில் இந்துக் கல்லூரி.

இணுவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் விவசாயப்பாட ஆசிரியர்
திரு.இ.ஐங்கரன் அவர்களின் தந்தையார்
திரு.கந்தையா இராசா
(இணுவில் மேற்கு, இணுவில்)



அவர்களின் மரணச் செய்தி
அறிந்து ஆழ்ந்த
துயருருகின்றோம்.
அன்னாரின்
குடும்பத்திற்கு எமது
அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தி
யடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்
இணுவில் இந்துக் கல்லூரி.
(6353)

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வறுமைக்கோட்டிற்குட்பட்ட பொதுமக்களுக்கு இராணுவத்தினரால் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. பருத்தித்துறையிலுள்ள 551 ஆவது படைத்தலைமையகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 200 இற்கும் அதிகமானோருக்கு பொருட்கள் வழங்கப்பட்டன. ஒரு பொதியில் இரண்டு கிலோ பருப்பு, இரண்டு கிலோ அரிசி, ஒரு கிலோ சீனி உள்ளிட்ட 1200 ரூபாய் பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் யாழ்.பாதுகாப்புப்படைகளின் கட்டளைத்தளபதி தர்ஷன கெட்டியாராட்சி, 551 ஆவது படைப்பிரிவின் தளபதி கேணல் பெரேரா, பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ, கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-மகாலிங்கம்)



# பாரதம்

## ஒடிசாவில் துப்பாக்கிச் சமர் 5 மாவோயிஸ்டுகள் உயிரிழப்பு



(ஜம்மு)

ஒடிசா மாநிலம், மால் கங்கிரி மாவட்டத்தில் நடை பெற்ற துப்பாக்கிச் சண்டை யில் 5 மாவோயிஸ்டுகளை பாதுகாப்பு படையினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுட்டுக்கொன்றுள்ளனர்.

மால்கங்கிரி மாவட்டம், கலிமேடா பகுதியில் மாவோ யிஸ்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் படையினர் அவர்களை சுற்றி வளைத் துள்ளனர்.

இதன்போது, இருதரப் பினருக்கும் இடையில் கடு மையாக நடைபெற்ற துப் பாக்கிச் சண்டையில் 5 மாவோயிஸ்டுகளை படை யினர் சுட்டுக் கொன்றுள்ள னர்.

இதனைத் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையிலும் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வருவதாக இந்திய இரா ணுவ செய்திகள் தெரிவிக் கின்றன.

இதேவேளை ஜம்மு-காஷ்மீர் மாநிலம், சோபி யான் மாவட்டத்தில் பாது காப்பு படையினரால் இரண்டு பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட் டமையும் குறிப்பிடத்தக் கது. (7)

## கர்நாடக இடைத்தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி நான்கு இடங்களை கைப்பற்றி முன்னிலை

(பெங்களூர்)

கர்நாடக மக்களவை இடைத்தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி 4 இடங்களை கைப்பற்றி முன்னிலை வகித் துள்ளது. இந்நிலையில் பா.ஜ.க. ஒரு இடத்தை மாத் திரமே கைப்பற்றியுள்ளது.

பெல்லாரி, ஷிமோகா, மாண்டியா ஆகிய 3 மக் களவை தொகுதிகள் மற்றும் ராம்நகர், ஜமகண்டி ஆகிய 2 சட்டப்பேரவை தொகுதி களில் நடந்த இடைத்தேர் தலுக்கான வாக்கு எண் ணிக்கை நடவடிக்கை நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டு தேர்தல் முடிவுகள் வெளியி டப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் காங்கிரஸ் கட்சியானது ஜம கண்டி மற்றும் பெல்லாரி ஆகிய 2 தொகுதிகளிலும் மதசார்பற்ற ஜனதாதள கட்சி ராம்நகர் மற்றும் மாண் டியா ஆகிய 2 தொகுதிகளில் முன்னிலையில் உள் ளது.

பாரதீய ஜனதா ஷிமோகா தொகுதியில் மாத்திரம் முன் னிலை வகித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (7)

## சபரிமலை போராட்டத்தில் ஈடுபட்ட 200 பேர் மீது வழக்குத்தாக்கல்!

(டில்லி)

சபரிமலையில் 50 வயது கடந்த பெண்ணுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட 200 பேர் மீது பொலிஸார் வழக் குத்தாக்கல் செய்துள்ளனர்.

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு 10 முதல் 50 வயது வரையிலான பெண் கள் செல்ல தடையிருந்து வந்த நிலையில், அங்கு அனைத்து வயது பெண்க ளையும் அனுமதிக்க வேண் டும் என்று கடந்த செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங் கியது.

இதற்கு ஐயப்ப பக்தர் களும், இந்து அமைப்பு களை சேர்ந்தவர்களும் மற் றும் பாரதீய ஜனதா கட்சி யினரும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், திரு வாங்கூர் கடைசி மன்னர் சித்திர திருநாள் பலராம வர்மாவின் பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு பூஜைக் காக ஐயப்பன் கோவில் நடை நேற்று முன்தினம் திங்கட் கிழமை மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 10 முதல் 50 வயது வரையிலான பெண் கள் யாரும் வராததால், அசம்பாவிதம் எதுவும் இன்றி நேற்று கோவிலில் பூஜை அமைதியாக நடைபெற்றது.

மேலும் சபரிமலைக்கு 50 வயதுக்கு கீழ் உள்ள பெண் ஒருவர் தரிசனம் செய்ய வந்துள்ளார் என வதந்தி பரவியது.

இதற்கு எதிர்ப்பு தெரி வித்து பக்தர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை போரா ட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து பக் தர்களிடம பொலிஸார் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். மேலும் தரிசனத்திற்கு வந்த பெண்ணிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்ட போது குறித்த பெண் 50 வயதை கடந்தவர் என தெரிய வந்தது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து சபரிமலை தரிசனத்திற்கு வந்த பெண்ணுக்கு எதிராக போராட்டத்தை மேற்கொண்ட வர்களை கண்டறியும் பணி யில் பொலிஸார் ஈடுபட்ட னர்.

இதற்காக சி.சி.டி.வி. காணொலி பதிவுகளை ஆய்வு செய்து, இதில் 200 பேர் மீது பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (7)

## இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தென்கொரிய ஜனாதிபதியின் மனைவி சந்திப்பு

(டில்லி)

அயோத்தி தீபவிழாவில் பங்கேற்பதற்காக இந்தியா வந்துள்ள தென்கொரியா ஜனாதிபதியின் மனைவி நேற்று முன்தினம் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினார்.



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள அயோத் தியில் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை மூன்று நாட்கள் தீபஉற்சவம் நடை பெறுகின்றது. இதில் உ.பி. ஆளுநர் ராம்நாயக், முதல் வர் யோகி ஆதித்யநாத் மற்றும் பல்வேறு பிரமுகர் கள் பங்கேற்கவுள்ளனர்.

தீபவிழாவில் சுமார் 3 இலட்சம் அகல் விளக்குகள் ஏற்றி வழிபாடு நடத்தப்பட் டது. பிரமாண்டமான தீப உற்சவத்தில் தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் மனைவி கிம் ஜங்சூக் நேற்று பங்கேற்றார்.


இதற்காக சிறப்பு விமா னம் மூலம் கடந்த ஞாயிற் றுக்கிழமை இரவு டில்லி வந்து சேர்ந்த கிம் ஜங்சூக் நேற்று முன்தினம் டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பாடசாலை அதிபர், மாணவர் 79 பேர் துப்பாக்கி முனையி

### கமரூனில் பயங்கரவாதிகள்

(யவுண்ட்)

கமரூன் நாட்டில் பாட சாலை அதிபர் மற்றும் ஆசி ரியர், மாணவர்கள் உட்பட 79 பேரை துப்பாக்கி முனை யில் பயங்கரவாதிகள் கடத் திச் சென்றது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



மத்திய ஆபிரிக்க நாடு களில் ஒன்றாக விளங்குவது கமரூன் நாடு. அந்த நாட்டில் தனி நாடு கேட்டு ஆங்கிலோ போன் என்னும் பயங்கர வாத இயக்கத்தினர் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், கமரூ னின் வடமேற்கு பகுதியின் தலைநகரான பமெண்டா அருகே நீவின் என்ற கிராமத் தில் உள்ள ஒரு மேல் நிலைப் பாடசாலைக்குள் துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகள் நேற்று உள்ளே புகுந்தனர்.

அங்கு படித்து வந்த 10 முதல் 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் 78 பேர் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோரை துப்பாக்கி முனையில் பயங்கரவாதிகள் கடத்திச் சென்ற னர்.

## ஈரானிடமிருந்து கச்சாய் எண்ணெ இந்தியாவிற்கு தற்காலி

### அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் போ

(வோஷிங்டன்)

ஈரானிடமிருந்து பெற்றோ லிய கச்சாய் எண்ணெய் கொள்முதல் செய்ய இந்தியா வுக்கு அமெரிக்கா தற்காலிக அனுமதியளித்தது. அமெரிக்க வெளியுறவுத் துறை அமை ச்சர் மைக் போம்பியோ நேற்று முன்தினம் திங்கட்கிழமை இது தொடர்பிலான உத்தி யோக பூர்வ அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

ஈரான் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதிப் பதுடன், அந்நாட்டிடமிருந்து கச்சாய் எண்ணெய் கொள்வ னவு செய்யும் நாடுகள் மீது பொருளாதார தடைகள் விதிக் கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல் விடுத்திருந்தார்.

இந்தநிலையில் ஈரானிடம் எண்ணெய் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் தொடரும் என, இந்தியா அண்மையில் தெரிவித்தது. இதுகுறித்து அமெரிக்கா விடம் இந்தியா சார்பில் விளக்கமும் அளிக்கப்பட்டது.

அமெரிக்காவின் இந்த நிபந்தனை க்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகாரம் அளிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் இறுதி முடிவைத்தவிர வேறு எந்த நாட்டின் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட முடியாது என்பது இந்தியா கடைப்பிடித்துவரும் வெளியுறவுத்துறை கொள்கையாகவுள்ளது.

முன்னர் இருந்த அளவை விட ஈரானிடமிருந்து இறக்குமதி செய்யும் பெற்றோலிய கச்சாய் எண்ணெயின் அளவை இந்தியா ஓரளவுக்கு குறைத்து கொண்டுள்ளது.

எனினும் உள்நாட்டு நுகர்வுத் தேவையை கருத்தில் கொண்டு ஈரா னிடம் இருந்து இறக்குமதியை முற்றி லுமாக நிறுத்திவிட வேண்டும் என்

## இந்தோனேசியா அரசாங்கமே பொ

### உறவினர்கள்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் லயன் எயார் நிறுவன விமா னம் 189 பயணிகளுடன் கடலில் விழுந்து விபத்துக் குள்ளான சம்பவத்திற்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என உயிரிழந்த வர்களின் உறவினர்கள் தெரி வித்துள்ளனர்.



மேலும் அந்த விமானம் பறக்க தகுதியற்றது என்றால் எதற்காக அதை பயன்பாட் டுக்கு எடுத்துக்கொண்டனர் என்றும் அது தொடர்பில் உரிய முறையில் விசாரிக்க வேண் டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவிலி ருந்து 189 பயணிகளுடன் புறப்பட்ட பயணிகள் விமானம் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக சென்ற 13 ஆவது நிமிடத்தில் திடீரென கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் உயிரிழந்த பயணிகள், அவர்களின்





# ...னவர்கள் உட்பட ...னயில் கடத்தல்

## ...திகள் துணிகரம்



கடத்திச் செல்லப்பட்டவர்கள் எங்கு
14 கொண்டு செல்லப்பட்டனர், பயங்கரவாதி
78 களின் கோரிக்கைகள் என்ன என்பன
...பர் போன்ற விபரங்கள் உடனடியாக தெரிய
...ில் வரவில்லை. கடத்தலில் ஈடுபட்ட பயங்கர
...ன்ற வாதிகளை தேடும் பணியை கமரூன்
அரசு முடுக்கி விட்டுள்ளது. (7)

# பெருவில் பஸ் விபத்து 20 பேர் உயிரிழப்பு

## 40 பேர் படுகாயம்

(லிமா)

பெருவில் இடம்பெற்ற விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், 40 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து அதிவேக வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தடம் புரண்டமையினாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

அத்துடன், குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (7)

# இத்தாலியில் கனமழை உயிரிழப்பு 30 ஆக உயர்வு

(ரோம்)



இத்தாலியில் கடந்த ஒரு வாரமாக பெய்த பலத்த மழையால் மரங்கள் விழுந்தும் வீடுகள் இடிந்தும் 30 பேர் பலியாகியுள்ளனர்.

இத்தாலியில் கடந்த ஒரு வாரமாக மிரட்டிக் கொண்டிருந்த புயல் நேற்று முன்தினம் கரையை கடந்தது. அப்போது பலத்த காற்றுடன் மழை கொட்டியது. இதனால் வடக்கு வெனிடோ பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டது.

இவை தவிர சிசிலி, தெற்கு சர்டினியா பகுதிகளும் பாதிப்புக்குள்ளாகின. சிசிலி தீவில் தாஸ்டில் டாக்சியா என்ற பகுதி கடும் சேதம் அடைந்தது. அங்கு மிலிசியா என்ற ஆற்றின் கரை உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்தது.

இதனால் வீடுகள் தண்ணீரில் மூழ்கின. அதில் 2 குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் நீரில் மூழ்கி பலியாகினர். அவர்களில் குழந்தைகளும், முதியவர்களும் அடங்குவர். அதே நேரத்தில் பலியானவர்களின் குடும்பத்தில் இருந்து 3 பேர் மட்டும் மரங்களில் ஏறி உயிர் தப்பினர்.

வெள்ளத்தில் சிக்கி 3 கார்கள் அடித்து செல்லப்பட்டன. அதில் இருந்த 3 பேர் உயிரிழந்தனர். மேலும் பலத்த காற்று வீசியதால் மரங்கள் விழுந்தும் வீடுகள் இடிந்தும் 17 பேர் பலியாகினர். இது வரை 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

மழை வெள்ளத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் மூழ்கி கிடக்கின்றன. 2 இலட்சத்து 500 ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டிருந்த அன்னாசித் தோட்டங்கள் அழிந்து விட்டன.

கடும் பாதிப்புக்குள்ளான சிசிலியில் வீதிகள் மூடப்பட்டன. பாடசாலைகள், பூங்காக்கள் மற்றும் பொதுமக்கள் கூடும் பொழுது போக்கு இடங்களை மூடுமாறு உத்தரவிட்டுள்ளது. (7)

# ஈராக்கில் தொடர் குண்டுவெடிப்பு; இராணுவவீரர் உட்பட 6 பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் பயங்கரவாதிகள் நடத்திய தொடர் குண்டு வெடிப்பு தாக்குதலில் இராணுவ வீரர் உட்பட 6 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஷியா பிரிவினர் அதிகம் வாழும் பகுதிகளை குறிவைத்து பயங்கரவாதிகள் தொடர் குண்டு வெடிப்புகளை நிகழ்த்தினர்.



பக்தாத்தின் வடக்கு பகுதியில் உள்ள ஏடன் நகரில் பஸ் நிலையத்தில் நடந்த குண்டுவெடிப்பில் 2 பேர் உடல் சிதறி உயிர் இழந்தனர். மேலும் 6 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

அதேபோல் தர்மியா என்கிற நகரில் இராணுவ வீரர்களின் அணிவகுப்பின் போது குண்டு வெடித்தது. இதில் ஒரு இராணுவ வீரர் பரிதாபமாக இறந்தார். 2 வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

அல்-சாகா நகரில் அரசு ஊழியர் ஒருவரின் காரில் பயங்கரவாதிகள் வெடிகுண்டு வைத்தனர். இதை அறியாமல் அவர் அந்த காரில் பயணித்த போது, குண்டு வெடித்து சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார்.

சர்தார் நகரில் நடந்த குண்டுவெடிப்பில் 2 பேர் கொல்லப்பட்டனர். 4 பேர் படுகாயம் அடைந்தனர். அதே போல் பக்தாத்தின் வடகிழக்கு பகுதியில் அடுத்தடுத்து 2 பஸ்களில் குண்டு வெடித்ததில் 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கு எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பு ஏற்கவில்லை. (7)

# ...ணெய் கொள்முதல் ...காலிக அவதி

## ...க் போம்பியோ அறிவிப்பு

...பும் பதை ஏற்க முடியாது என இந்திய மத்திய
...ன அரசு ஏற்கனவே திட்டவட்டமாக
...து. தெரிவித்திருந்தது.
...யா இதற்கிடையே, அமெரிக்க முன்னாள்
...து. ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆட்சிக்
...ன காலத்தில் படிப்படியாக விலக்கப்பட்ட
...ரம் அனைத்து தடைகளையும் ஈரான் மீது
...கள் தற்போது ட்ரம்ப் ஒருசேர திணித்துள்ளார்.
...வறு நேற்று முன்தினம் முதல் இந்த தடை
...தம் கள் அமுலுக்கு வந்துள்ளது.
...யா இந்நிலையில், ஈரானிடமிருந்து
...றை பெற்றோலிய கச்சாய் எண்ணெய்
வாங்க இந்தியாவுக்கு தற்காலிக விலக்கு
...விட அளிக்க அமெரிக்க அரசாங்கம் தீர்மானி
...யும் த்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்
...ின் துறை அமைச்சர் மைக் போம்பியோ
...த்து அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.
சீனா, இந்தியா, இத்தாலி, கிரீஸ்,
...வுத் ஜப்பான், தென்கொரியா, தாய்வான் மற்
...ரா றும் துருக்கி ஆகிய 8 நாடுகளுக்கு இந்த
...ற்றி தற்காலிக விலக்கு அளிக்கப்படுவதாக
...ான் அவர் குறிப்பிட்டுள்ளார். (7)

# பிரேசில் தூதகரத்தை ஜெருசலேமுக்கு மாற்றுவதற்கு இஸ்லாமிய நாடுகள் கண்டனம்

(இஸ்தான்புல்)

அமெரிக்காவை தொடர்ந்து பிரேசில் நாடும் தனது தலைமை பிரேசில் தூதரகத்தை இஸ்ரேல் நாட்டின் ஜெருசலேம் நகருக்கு மாற்றும் முடிவுக்கு இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் நட்பு நாடான இஸ்ரேல் நாட்டின் தலைநகராக டெல் அவிவ் இருந்து வருகிறது. இஸ்லாமியர்களும் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களும் உரிமை கொண்டாடிவரும் ஜெருசலேம் நகரை இஸ்ரேல் தலைநகராக மாற்றும் வகையில் அமெரிக்கா அண்மையில் ஜெருசலேம் நகரில் தனது தலைமை தூதரகத்தை கடந்த ஆண்டு திறந்துள்ளது.

அமெரிக்காவை பின்பற்றி சில ஐரோப்பிய நாடுகளும் தங்களது தூதரகங்களை ஜெருசலேம் நகருக்கு மாற்ற தீர்மானித்தன.

அவ்வகையில், பிரேசில் நாடும் தங்களது தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்றும் முடிவை அறிவித்துள்ளது. இந்த முடிவுக்கு இஸ்லாமிய கூட்டுறவு நாடுகளின் கூட்டமைப்பு நேற்று கண்டனம் தெரிவித்துள்ளது.

தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றும் பிரேசில் நாட்டின் அறிவிப்பு சர்வதேச சட்டங்களையும், ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களையும் மீறும் வகையில் அமைந்துள்ளதாக இந்த கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில் நாட்டு ஜனாதிபதியாக விரைவில் பதவியேற்கவுள்ள ஜெய்ர் போல் சோனாரோ இந்த முடிவை கைவிட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

1969ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த கூட்டமைப்பில் 53 இஸ்லாமிய நாடுகள் உட்பட ஒட்டுமொத்தமாக சுமார் 180 கோடி மக்கள்தொகையை 57 நாடுகள் இடம்பெற்றுள்ளன. (7)

# ...யா விமானவிபத்திற்கு ...பொறுப்புக்கூற வேண்டும்

## ...ள் கோரிக்கை



...ட்ட உடைமைகள், விமான பாகங்கள்
...பக் தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன.
13 இந்நிலையில் மிகுதி பயணிக
...ில் ளையும் 2 ஆவது கறுப்பு பெட்டியை
...தில் யும் மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட
...ின் னர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கருத்துக்களை வெளியிட்ட இறந்தவர்களின் உறவினர்கள் போக்குவரத்து அமைச்சர் புடி கரியா சுமாடி மற்றும் நாட்டின் போக்குவரத்து பாதுகாப்பு குழுவின் தலைவரிடம் கேள்வியெழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# சுற்றுலாப்பயணிகள் படகில் தீ

## 9 பேரும் பாதுகாப்பாக மீட்பு



(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டில் நேற்று முன்தினம் சுற்றுலா படகில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கிய இங்கிலாந்து நாட்டவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Phuket என்ற இடத்தில் படகு ஒன்றில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒன்பது சுற்றுலா பயணிகள் கடலில் பயணித்தனர்.

அவர்கள் சென்ற படகில் திடீரென தீப்பிடித்ததால், கடலோர காவல் படைக்கு அவசரச் செய்தி அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடல் பகுதிக்கு விரைந்து சென்ற பாதுகாப்புப் படையினர் தீயில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த அவர்களை பாதுகாப்பாக மீட்டனர்.

சுற்றுலா பயணிகள் மீட்கப்பட்ட அடுத்த சில நிமிடங்களில் படகு பலத்த சப்தத்துடன் வெடித்துச் சிதறியதாக தெரிவிக்கப்படுகின்றது. (7)

# ஆப்கானில் நோய்த்தொற்றினால் 12 குழந்தைகள் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் வைத்தியசாலையில் 12 குழந்தைகள் ஒரே நேரத்தில் புதுவித நோய்த்தொற்றினால் உயிரிழந்து இருப்பது சோகத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தான் நாட்டின் பன்ஷிர் மாகாணத்தில் உள்ள அவசர சிகிச்சைக்கான வைத்தியசாலையில் புதிதாக பிறந்த 12 குழந்தைகள் ஒரே நேரத்தில் உயிரிழந்துள்ளன. இதற்கான காரணம் தெரியாமல் வைத்தியர்கள் குழப்பத்தில் உள்ளனர்.

இது தொடர்பாக வெளியிடப் பட்ட செய்தியில், இறந்த 12 குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான நோய் தொற்றுக்கான அறிகுறிகள் இருப்பதாகவும், அந்த நோய் குறித்து ஆய்வு மேற்கொள்ள தலைநகர் காபூலில் உள்ள ஆராய்ச்சிக்கூடத்துக்கு ஆய்வு மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறந்த குழந்தைகளின் இந்த மர்ம மரணத்துக்கான வேறு ஏதேனும் காரணங்கள் இருக்குமா? என்ற கோணத்திலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

# 'அட்டை' மைத்திரிக்கு மங்கள பதிலடி



(கொழும்பு)

அட்டையை விட வண்ணத்துப் பூச்சியை நான் விரும்புகிறேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பதிலடி கொடுத்திருக்கிறார் முன்னாள் நிதியமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த மூன்று ஆண்டுகளில் அரசாங்கத்தின் முடிவுகளை அமைச்சரவை எடுக்கவில்லை என்றும், ரணில் விக்கிரமசிங்கவைச் சுற்றியிருந்த வண்ணத்துப்பூச்சிக் குழுவே எடுத்தது என்றும் இரட்டை பாலியல் அர்த்தத்துடன் கூறியிருந்தார்.

ஒரு பாலுறவாளர்களை சிங்களத்தில், வண்ணத்துப் பூச்சி (Samanala) என்று. கூறப்படும் வழக்கம் உள்ள நிலையில். ரணில் விக்கிரமசிங்கவின் பெயரைக் குறிப்பிட்டு ஜனாதிபதி அவ்வாறு கூறியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி மிகக் கேவலமான வகையில் சொல்லாடல்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்று ஊடகவியலாளரும், அரசியல் செயற்பாட்டாளருமான சுனந்த தேசப்பிரிய உள்ளிட்ட பலரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், ஜனாதிபதியின் கருத்துக்கு தனது டுவிட்டர் பதிவு ஒன்றில் மங்கள சமரவீர பதிலடி கொடுத்திருக்கிறார். அதில், "அட்டையை விட வண்ணத்துப்பூச்சியை அதிகம் விரும்புகிறேன், இலங்கை ஜனாதிபதியே! என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம், ஜனாதிபதி மைத்திரியை அட்டை என்று குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# ஜனாதிபதியுடன் ராஜித சந்திப்பு கட்சி தாவலுடன் தொடர்பற்றது

(கொழும்பு)

ஜனாதிபதி விடுத்த அழைப்பின் பேரில் அவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்ததாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் செய்தியொன்றை ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவரைச் சந்தித்தேன். நான் தனியாக செல்ல விரும்பாததால் ஜோன் அமரதுங்கவை அழைத்துச்சென்றேன். ஜனாதிபதி தான் ஏன் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதற்கு தீர்மானித்தார் என்பதை எனக்கு தெளிவுபடுத்தினார். மைத்திரியின் நடவடிக்கைகள் நாட்டிற்கு எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பதை நான் அவரிற்கு தெரிவித்தேன். இதன் பின்னர் நான் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இந்த சந்திப்பு குறித்த விடயங்களை தெரிவித்தேன்.



ஜனாதிபதியுடனான எனது சந்திப்பு நாட்டை பொறுத்தவரை சாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியுடனான எனது சந்திப்பு சாதகமானதாக அமைந்தது. எனினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் எப்படி நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். எனது சந்திப்பு கட்சி தாவலுடன் தொடர்பற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# வரலாற்றில் பாராளுமன்ற அமர்வுகளை அதிகளவில் ஒத்திவைத்த ஜனாதிபதி!

(கொழும்பு)

இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்ட சம்பவங்கள் 42 பதிவாகியுள்ளன. இதில் 21 சம்பவங்கள் 1947 முதல் 1978 வரையான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

1978 முதல் இதுவரையில் 21 தடவைகள் சபை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சியிலேயே அதிக தடவைகள் பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

1978 முதல் 1988 வரையான காலப்பகுதியில் மாத்திரம் 7 தடவைகள் பாராளுமன்றம் ஜனாதிபதியின் தலையீட்டினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் காலத்தில் 4 தடவைகள் பாராளுமன்ற அமர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

அதே போன்று, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் 5 தடவைகள் பாராளுமன்ற அமர்வுகள் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் 3 தடவைகள் பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் 2 தடவைகள் சபை அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. கடந்த ஒக்டோபர் 27 ஆம் திகதி இறுதியாக பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் கு. மதுசுதனின் பிறந்த நாளை முன்னிட்டு கைகொடுப்போம் சமூக மேம்பாட்டு அமையத்தின் ஊடாக மாணவர்களுக்கு மதுசுதனால் கற்றல் உபகரணங்கள் கோண்டாவில் சி.சி. தமிழ்க் கலவன் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன.

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### மனமும் உடலும்

மனது நன்றாக இருந்தால் உடம்பு நன்றாக இருக்கும். உள்ளம் ஆரோக்கியமாக இருக்கிறவங்களுக்கு உடம்பும் ஆரோக்கியமாக இருக்கும்! உள்ளத்தில் தெம்பும் மகிழ்ச்சி யும் இருந்தால் நோயும் சோர்வும் அணுகுவதில்லை!நாம் மனது கசந்து போய் இருந்தோம் என்றால் நமக்கு நோய் வருவதற்கான சந்தர்ப்பமும் அதிகம் . இரண்டு பேருக்கு ஒரே விதமான நோய்! அதில் ஒருத்தர் மனத்தெம்பு இல்லா தவர். இந்த இரண்டு பேருக்கும் ஒரேவிதமான மருந்தைக் கொடுக்கிறார்கள்! மனத்தெம்பு உள்ளவருக்கு சுலபமாக குணமாகி விடுகிறது!இன்னொருத்தருக்கு கால தாமதம் ஆகிறது!மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் பல விதமான சோதனையெல்லாம் செய்து பார்த்துவிட்டு இதைச் சொல்கிறார்கள்.

"வாழ்க்கையின் உண்மைகளை இலேசாக எடுத்துக் கொண்டு சிரித்த முகத்துடன் கவலை இல்லாமே வாழ்பவர்களிடம் நோய்கள் நெருங்குவதில்லை.

மேரிலாண்டில் இருக்கிற மன இயல் ஆராய்ச்சி நிபுணர் மைக்கேல் ரஃப் இதைச் சொல்கிறார்.

வழக்கம் போல இதிலேயும் எலியை வைத்து சில ஆராய்ச்சியெல்லாம் செய்தார்கள்! இரண்டு குரூப் எலிகள். ஒரு குரூப் அமைதியாக இருப்பதைப் போல செய்தார்கள். இன்னொரு குரூப்புக்கு சில அவஸ்தைகளை உண்டு பண்ணினார்கள். அமைதியாக இருந்த எலிக்கு நோய் எதிர்ப்புத்திறன் அதிகமாக இருந்தது. அமைதியில்லாமல் இருந்த எலியெல்லாம் தொற்று நோயினால் சீக்கிரமாக பாதிக்கப்பட்டது. பல செத்துப் போய்விட்டன.

நம் உடம்புக்கு ஏதாவது கஷ்டம் வரும் போதெல்லாம் அட்ரினலின் சுரப்பிகளுக்கு மூளை எச்சரிக்கை கொடுக்கிறது. அதனாலே இது விறுவிறுப்பா வேலை செய்யத் தூண்டப்படுகிறது. அதனாலே மூளை தெளிவாகவும் மனதில் கலக்கம் இல்லாமலும் இருக்கக் கூடிய நிலை மையிலே இந்த சுரப்பிகள் சரியாக–பக்குவமாக இயங் கிறது.அப்படி இல்லாத நிலைமையிலே எதிர்ப்புத் திறன் குறைந்து போகிறது.

இது சாதாரண நோய்க்கு மட்டும் இல்லாமல் தொற்று நோய்க்கும் பொருந்தும். அப்படியென்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஒரு பத்து வருஷத்துக்கு முன்னால் இப்படி சொல் லியிருந்தால் எல்லாரும் சிரித்திருப்பார்கள். !தொற்று நோய் பரவுவதற்கு உணவு –நீர்–காற்று அப்புறம் இதைச் சார்ந்து வருகிறது கிருமிகள் தரக்கூடிய பாதிப்புகள் இதெல்லாம் தான் அடிப்படைக் காரணம் என்று ஏற்கனவே நமக்கு எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

அதே மாதிரி முதுமை –பலவீனம் –உடல்சோர்வு சத்து ணவு இல்லாத நிலைமை இதெல்லாம் கூட தொற்று நோய் பரவ காரணம் என்று நமக்கு தெரியும்.

ஆனால்... மன அமைதி –உள்ள நிறைவு–மன மகிழ்ச்சி இதெல்லாம் நம்மை இந்த நோய்களின் பாதிப்பிலிருந்து காப்பாற்றும் என்றோ மன சலிப்பு –துயரம் –மனக்கசப்பு–மன அமைதிக் குலைவு –இதெல்லாம் இந்த நோய்களின் பாதிப்பை தூண்டும் என்றோ இதுவரைக்கும் நமக்கு யாரும் சொன்னாதில்லை!இப்ப சொல்கிறார்கள்.

இங்கிலாந்தில் சாலிஸ்பரில் அப்படி என்கிற ஒரு ஊரில் ஒரு ஆராய்ச்சி ஜலதோஷம் –இருமல் –கபம் சம்பந்தமாக ஆராய்ச்சி செய்கிற நிபுணர்கள் புதுசாக ஒரு உத்தியை கையாண்டார்கள். 50 பேரில் 25 பேருக்கு இந்த தொல் லையை தடுக்கக்கூடிய மருந்து மாத்திரைகள் மட்டும் கொடுத்தார்கள்.

இன்னொரு 25பேரிடம் என்ன சொன்னார்கள் என்றால் இந்த மருந்து கொடுத்தும் உங்களுக்கு சரியா வரவில்லை என்றார் உங்க வயிற்றின் உள்ளே குழாயை செலுத்தி ஜீரண நீரை வெளியே எடுத்து சோதனை செய்ய வேண் டியிருக்கும். அப்படி என்று எச்சரிக்கையாக சொல்லி வைத்தார்கள். அவ்வளவுதான் இவர்களுக்கு பயம் வந்து விட்டது. மாத்திரை மட்டும் சாப்பிட்டவர்கள் குணமாகி விட் டார்கள்! பயந்தவர்களுக்கு பாதிப்பு இன்னமும் அதிக மாகிவிட்டது!

இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் மனக் கவலையும்–பயமும் –கலக்கமும் உண்டாகும் போது உடம்பில் இயல்பாக இருக்கக்கூடிய எதிர்ப்புத்திறன் அதிக மாக பாதிக்கப்படுகிறது.

அந்த ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டிருக்கிற முடிவு இது நம் மெய்ஞானம் என்ன சொல்கிறது?

பற்றில்லாமே ஒவ்வொரு காரியத்தையும் கடமை உணர்வோடு செய்யும் போது அதனுடைய வெற்றி–தோல்வி நம்மை பாதிக்கிறது இல்லை!அதனாலே மனக் கவலை இல்லாமல் வாழ முடிகிறது!

சுருக்கமாகச் சொல்லப்போனால்... எதற்கும் கவலைப் படாதீர்கள் ! பயப்படாதீர்கள் பதவி–பணம் –புகழ் இதை நினைத்து ரொம்பவும் அலட்டிக்காதீர்கள். அப்படி இருந்து அனுபவித்துப் பார்த்தால்தான் அதனுடைய அருமை புரியும்!

பயந்தவன் கதை ஒன்று உங்களுக்குத் தெரியுமா? ஒருத் தன் உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் காட்டுவதற்காக கிராமத்தில் இருந்து டவுனுக்கு போய்விட்டு திரும்பி ஊருக்கு வந்து கொண்டிருந்தான்.... இருட்டி விட்டது. வழியிலே ஒரு சுடுகாடு.அதைத் தாண்டி ஊருக்குப் போக வேண் டும்.அந்த சுடுகாட்டில் பேய்–ஆவி உலவு வதாக ஒரு வதந்தி.

இவன் இந்த இருட்டில் தனியாக அதை கடந்து போவ தற்கு பயம் ... பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

யாராவது ஆள் இந்த வழியாக வரட்டும் .... அவர்க ளுடன் சேர்ந்து கடந்த போய் விடலாமென்று நினைப்பு.

அவன் நினைத்த மாதிரியே ஒரு துணை கிடைத்தது . ஒரு ஆள் வந்தான் .ஏன் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று இவனைப் பார்த்துக் கேட்டான்.

துணைக்கு யாராவது வரட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தேன் என்றான். நானும் அந்த பக்கம்தான் போகிறேன் ...சரி வாங்க போகலாம் என்றான் அவன்.

இரண்டு பேரும்பேசிக்கொண்ட அந்த சுடுகாட்டில் நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.!இந்த சுடுகாட்டில் பேய் பிசாசு எல்லாம் நடமாடுவதாக ஊரில் பேசிக் கொள் கிறார்களே! என்றான் பயந்த ஆசாமி.

"அப்படியா எனக்குத் தெரியாதே! என்றான் துணைக்குவந்த ஆள்!

"அது எப்படி உனக்குத் தெரியாமல் போனது?" என் றான் இவன் இதுக்கு அந்த ஆள்:

"ஏனென்றால்.. நான் செத்துப் போய் இருபது வருஷம் ஆகிவிட்டது என்றான்.

# இலங்கை ஜனநாயக கலாசாரத்தை பாதுகாத்துப் பின்பற்ற வேண்டும்

## பொதுநலவாயத்தின் செயலாளர் பட்ரிசீயா



(ஜெனிவா)

**இலங்கையை ஜனநாயக கலாசாரத்தையும் நடைமுறைகளையும் பாதுகாக்குமாறும் பின்பற்றுமாறும் பொதுநலவாயத்தின் செயலாளர் நாயகம் பட்ரிசீயா ஸ்கொட்லான்ட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

பொதுநலவாயத்தின் செயலாளர் நாயகம் பாராளுமன்றத்தை 14 ஆம் திகதி கூட்டும் ஜனாதிபதியின் அறிவிப்பை கவனத்திலெடுத்துள்ளார் என தெரிவித்துள்ள அவரின் பேச்சாளர் அரசமைப்பின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பாராளுமன்றத்தின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு பாராளுமன்றம் விரைவில் கூடும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் அரசியல் தலைவர்களையும் மக்களையும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டுள்ள செயலாளர் நாயகம் நாட்டின் அரசமைப்பும் சட்டத்தின் ஆட்சியும் மதிக்கப்படுவதை உறுதி செய்யுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை அரசாங்கமும் மக்களும் வேண்டுகோள் விடுத்தால் உதவுவதற்கும் ஏனைய நாடுகளுடன் இணைந்து உதவி வழங்குவதற்கும் இலங்கை தயார் எனவும் பொதுநலவாயத்தின் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## யாழிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து பாதையை விட்டு விலகி கவிழ்ந்தது!

### ஐவர் வைத்தியசாலையில் அனுமதி



(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்றுக் காலை பயணித்த தனியார் பேருந்து ஒன்று பாதையை விட்டு விலகி கவிழ்ந்ததில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

அதிக மழையின் காரணமாக வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் காயமடைந்த ஐவரும் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் நொச்சியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


## சர்வதேச ரீதியில் பிரபல்யமடைந்த கொழும்பில் தோன்றிய வானவில்!

(கொழும்பு)

உலகின் பிரபலமான புகைப்படங்களை வெளியிடும் இணையத்தளம் ஒன்றில் இலங்கையில் எடுக்கப்பட்ட புகைப்படமும் வெளியாகியுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி தோன்றிய வானவில்லை, கொழும்பில் பல பகுதியிலும் உள்ள மக்கள் பார்வையிட்டனர்.

வானவில் தோன்றும் போதும் மின்சாரக் கம்பிகளிலிருந்து பறவைகள் பறப்பதனை போன்ற காட்சி புகைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது.



இந்தப் புகைப்படம் உலகின் சிறந்த புகைப்படங்களுக்குள் ஒன்றாக தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அரசியல் மாற்றத்தால் ஏமாற்றம்

# தமிழர்களுக்கான தீர்வு குறித்த தேவையை ஜனாதிபதிக்கு ஞாபகப்படுத்தினார் சம்பந்தன்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியை நீக்கி புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவை நியமிக்க தமிழர்களாகிய நாம் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டோம். ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தினால் தமிழர்கள் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்காதவரையில் நாடு முன்னேற்றம் காண்பது கடினம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற தேசிய தீபாவளிப் பண்டிகை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பொறுப்பேற்றப் பின்னர் மூன்று தேசிய தீபாவளி பண்டிகை நிகழ்வில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு முறை பேசும்போதும் அடுத்த தீபாவளிக்கு முன் நாட்டைப் பிரிக்காத, ஒரே நாட்டிற்குள் தமிழர்கள் சுதந்திரமாக இயங்கும் வகையிலான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தேன்.

அதேபோன்றதொரு நிகழ்வு நடக்கும் இந்நேரத்தில் நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நான் மீண்டும் தமிழர்களுக்கான தீர்வு குறித்த தேவையை ஞாபகப்படுத்துகிறேன் என்றார்.

செல்வநாயகம் தலைமையில் நாம் அகிம்சை போராட்டத்தை முன்னெடுத்தோம். அதன்பிறகு ஆயுதமேந்திய போராட்டமாக மாறியது. அப்போதும் எமக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. மீண்டும் நாம் ஒரு யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தம் நிறைவடைந்து இத்தனை வருடங்களில் எமக்கான தீர்வு இன்னும் கிடைத்தபாடில்லை.

கடந்த காலத்தில் நிகழ்ந்த யுத்தத்தினால் நாடு பின்னோக்கிச் சென்றுள்ளது. நமது அண்டை நாடுகள் பாரிய வளர்ச்சி கண்டுள்ள நிலையில் நம் நாடோ வளர்ச்சிப் பாதைக்கு செல்வதாகத் தெரியவில்லை. தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காத வரையில் நாடு முன்னேற்றம் காணாது.

அதனால் மீண்டும் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுக்கின்றோம் எதிர்வரும் தீபா வளிக்கு முன் தமிழர்களுக்கான தீர்வைக் காண வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். (இ-7)

## ஆஸியில் கைதான இலங்கை இளைஞன் நாடு திரும்பினார்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு உதவியளித்தார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாகியிருந்த கமர் நிசாம்டீன் நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

பல்கலைக்கழக மாணவனான கமர், கடந்த ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டு பின்னர் குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் விடுவிக்கப்பட்டார்.

ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் தொடர்புபட்டு அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் மல்கம் டேன்புல் மற்றும் பிரதி பிரதமர் ஜூலி பிஷப் ஆகியோரைக்கொலை செய்யத் திட்டமிட்டதாகக் கூறப்படும் குறிப்புப் புத்தகம் ஒன்றை வைத்திருந்ததாக கமர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.



இந்தக் குற்றச்சாட்டின் பேரில் அவர் நான்கு வாரங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார். எனினும், அவர் நிரபராதி என்ற அடிப்படையில் அவரின் குடும்பத்தினரும் நண்பர்களும் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்தனர். இதனையடுத்து கமர் நிசாம்டீன் விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 1000 ரூபா சம்பள உயர்வு குறித்து கலந்துரையாடல்



(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நிதி அமைச்சில் இடம்பெற்றது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் எஸ்.அருள்சாமி தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய நிதி அமைச்சின் செயலாளர் ஆட்டிகலவுடனான சந்திப்பு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ், அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, தேயிலை சபை அதிகாரி அனுரசிறி உட்பட பலர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இச் சந்திப்பின் போது தோட்டக் கம்பனிகள் நாள் சம்பளமாக 600 ரூபாய் வழங்க முன்வந்துள்ளது. எனவே தேயிலை சபையிலிருந்து தோட்ட கம்பனிகளுக்கு தற்காலிக கடன் திட்டம் ஒன்றை வழங்கித் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் நாள் சம்பளத்தை வழங்க ஆலோசிக்கப்படுள்ளதாகவும் பின்னர் கம்பனிகளிடம் கடன் தொகையை மீளப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தோட்டக் கம்பனிகளுடன் கலந்துரையாடி அவர்கள் சம்மதம் தெரிவித்த பின் பாராளுமன்றத்தில் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அருள்சாமி தெரிவித்ததுடன், தீபாவளியின் பின்னர் நல்ல செய்தி கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (இ-7)

# சுதந்திரக்கட்சி செயற்குழுவில் பிரதமர் மகிந்த பங்கேற்பார்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை செயற்குழுக் கூட்டம் நாளை ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

"அபேகம" வளாகத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் கட்சியின் மீளமைப்பு நடவடிக்கைகள் என்பன தொடர்பில் இதன்போது கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தரையிறங்கிய பிரமாண்டமான விமானம்

(கொழும்பு)

உலகின் இரண்டாவது பெரிய சரக்கு விமானமான ரஷ்யாவின் என்டனோவ் AN124-100-150 எட்டாவது தடவையாக நேற்று முன்தினம் மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியது.

மத்தள விமான நிலையத்தின் முகாமையாளர் உபாலி கலன்சூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.



எரிபொருள் நிரப்பல் மற்றும் விமானிகள் ஓய்வு எடுக்கும் நோக்கில் இந்த விமானம் நேற்று முன்தினம் தரையிறங்கியதாக அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் கராச்சி விமான நிலையத்திலிருந்து வந்த அந்த விமானம் நேற்று அதிகாலை இந்தோனேசியாவுக்குப்புறப்பட்டுச் சென்றது.

இந்நிலையில் குறித்த விமானம் தரையிறங்க 1568 டொலர்களும் தரித்து நிற்பதற்கான கட்டணமாக 471 டொலர்களும் சேவைகள் கட்டணமாக 3000 டொலர்களும் 83 ஆயிரம் லீற்றர் பெற்றோல் நிரப்பலுக்காகவென மொத்தமாக 10.17 மில்லியன் ரூபாய் குறித்த விமானத்திடம் இருந்து அறவிடப்பட்டதாக விமான நிலைய முகாமையாளர் தெரிவித்தார். ஏற்கனவே உலகின் பாரிய சரக்கு விமானமான என்டனோவ் என் 225 கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி யன்று மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 9 விதி எண் 3

செவ்வாய், குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். தன்னை நாடி வந்தவர்களுக்கு அரணாக விளங்குவார்கள். பெற்றோர்கள், பெரியவர்கள் மீது அன்பும், மரியாதையும் வைத்திருப்பார்கள். உடல் பலமும், மனபலமும் உடையவர்கள். நல்ல கற்பனை வளமிக்கவர்கள். நாணயமானவர்கள், இறைபக்தியும், கடுமையான உழைப்பும் உடையவர்கள். செய்தொழிலின் மீது பக்தியும் மரியாதையும் இருக்கும். நாட்டு நலனில் அக்கறை கொண்டவர்கள். பேச்சை விடவும் செயல் வேகம் அதிகமிருக்கும். எந்நேரமும் ஆழ்ந்த சிந்தனையிருக்கும்.

மக்கள் மத்தியில் புதுமையைப் புகுந்த கூடியவர்கள். பொது வாழ்க்கையில் தனக்கென்று தனியிடம் பிடிப்பார்கள். மனக்குழப்பத்தாலும் உணர்ச்சி வசப்படுவதாலும் சில நேரங்களில் என்ன பேசுவதென்றே தெரியாமல் பேசிவிடுவார்கள். பின்னர் நினைத்து வருத்தப்படுவார்கள். வேதம், புராணம், தத்துவம், ஆன்மீகம் என்று அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குவார்கள். ஞான தீர்க்கமுடையவர்கள். அறிவாளிகள். ஆராய்ச்சிகள் செய்யக் கூடியவர்கள். வெற்றியில் விவேகமும் தோல்வியில் துவளாத மனமும் கொண்டவர்கள். ஓயாத உழைப்பிருக்கும். தனக்கென்று தனிச்சட்டத்தை உருவாக்கி அதன் படி நடப்பார்கள். தன் இஷ்ட தெய்வத்தை மனம் ஒன்றி வழிபாடுவார்கள்.

புதிய பொருட்களை ஆய்வு செய்வார்கள். யோகம், தியானம், மருத்துவம், மனோவசியம் போன்ற துறைகளில் சிறப்படைவார்கள். நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபடுவார்கள். பாசாங்குகள் அதிகம் செய்வார்கள். தன் இனம் காப்பதில் வல்லவர்கள். உலக மக்களுக்கு வழிகாட்டியாக இருப்பார்கள். குடும்பப் பாங்கான மனைவியை விரும்புவார்கள். சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்டு நடப்பார்கள். புதிய நாடு, நகரம் போன்றவற்றைத் தோற்றுவிப்பார்கள். புதிய கட்டடங்களை மற்றவர்கள் வியக்கும் வண்ணம் கட்டி முடிப்பார்கள். இவர்களில் தீய ஆதிக்கத்தினர் மற்றவர்களை பற்றி அவதூறு பரப்புவர்.

மற்றவர் வீட்டின் மீது வெடிகுண்டு வீசுவது, தீ வைப்பது போன்ற தீய காரியங்களைத் துணிந்து செய்வார்கள். எதிரிகளை அதிகம் உருவாக்குவார்கள். இவர்கள் முன்னோர்கள் சொன்ன பாதையைப் பின்பற்றி நடப்பார்கள். நிதானமாகச் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். அமைதியை விரும்பக் கூடியவர்கள். இவர்களிடம் பலபேர் தங்களின் உடைமைகளை ஒப்படைப்பார்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றியே தீருவார்கள். அமைதியை விரும்பக் கூடியவர்கள். பிறருடைய உண்மையான மன நிலையை அறிந்து அதன்பின் ஆழ்ந்த நட்பு வைத்துக் கொள்வார்கள். பல கலைகளில் தேர்ச்சி பெறுவார்கள். இவர்கள் எப்போதும் தூய்மையாகவே காட்சியளிப்பார்கள். சுத்தமான ஆடைகளை அணிவார்கள். முன்கோபம் காரணமாக மிகவும் கண்டிப்புடனும் கடுமையாகவும் நடந்து கொள்வார்கள். புத்தகப் பிரியர்கள். குழப்பம் அடிக்கடி வந்து மனதை வாட்டியெடுக்கும். குழந்தைகள் மீது அதிக பாசமிருக்கும். கற்பனை வளமிக்கவர்கள்.




இயல், இசை, இலக்கியம், நாடகம் போன்றவற்றில் ஆர்வம் உடையவர்கள். அடிக்கடி தூர தேசப் பயணம் மேற்கொள்வார்கள். தியானம், மந்திரம், யோகம் போன்றவற்றால் நன்மை உண்டாகும். ஆளுமை சக்தியிருக்கும். யாருக்கும் தலை வணங்க மாட்டார்கள். பேச்சில் சூழ்ச்சிகள் கலந்திருக்கும். இயற்கைக் காட்சிகளைக் கண்டு லயித்துப் போவார்கள். மற்றவர்கள் தனக்கு அடிபணிய வேண்டுமென்று எண்ணுவார்கள். அதிகமான நினைவாற்றல் இருக்கும். பல வழிகளில் பணம் சேர்க்கும் திறனிருக்கும்.

நண்பர்கள் இவர்களுக்கு எல்லா வகையிலும் உதவிகள் செய்வார்கள். இளமையிலேயே முடி உதிரத் தொடங்கும். நரை முடிவரும். நிமிர்ந்து நடக்கக் கூடியவர்கள். பணிவாகப் பேசுவது போலத் தெரியும். வில்லங்கமான மனிதர்கள். தான் பெற்ற அதிர்ஷ்டம் மற்றவர்கள் அடையக் கூடாது என்ற எண்ணம் இருக்கும். பிறருக்கு அடியணியாத இவர்கள் மற்றவர்கள அனைவரையும் அடக்கியாள நினைப்பார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
3,12,21,30,1,10,19,28,9,18,27,5,14,23

**துரதிர்ஷ்ட திகதிகள்**
6,15,24,2,11,20,29

**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர்நீலம், மஞ்சள், ரோஸ், ஒரேஞ், கத்தரிப்பு நிறம், சிவப்பு.

**துரதிர்ஷ்ட நிறங்கள்**
கறுப்பு, பச்சை, இருண்ட நிறங்கள்

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**
கனகபுஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்க புஷ்பராகம், எமிதிஸ்ட், பவளம், ஓபல், கார்னட், ப்ளட்ஸ்டோன்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

90



> “போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து முற்றாக விரட்டுவதற்கு சிறந்த கடல் வலிமையை உடைய டச்சுக்காரரின் உதவியை நாடுவதைத் தவிர கண்டி மன்னன் இராசசிங்கனுக்கு வேறு வழி தெரியவில்லை.இராசசிங்கன் டச்சுக்காரரின் உள்நோக்கத்தை தீவிரமாக ஆராய்வதை விட்டு அவர்களின் உதவியுடன் போர்த்துக்கீசரை நாட்டை விட்டு அகற்றி விடவேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

எல்லாவற்றிற்கும் மேலாக தென்கிழக்காசிய நாடுகளில் குறிப்பாக இந்தோனேசியா, மலேசியத் தீபகற்பங்களில் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கும் இலங்கை தமது ஆதிக்கத்திற்குள் வரவேண்டும் என்பதே அவர்களின் முழு நோக்கமாக அமைந்திருந்தது.

அவ்வாறான ஓர் நிலைமையில் ஒல்லாந்து தேசத்திலிருந்து டச்சுக்காரரைக்கொண்டு வந்து இலங்கையில் குடியமர்த்துவதன் மூலம் கிழக்கில் தமது அதியுச்ச மேலாதிக்கத்தை நிச்சயம் பெற முடியும் என்பதும் அவர்களது கொள்கைத் திட்டமாகக் காணப்பட்டது.

ஆக மொத்தத்தில் இலங்கையை முழுமையாகத் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்து அதனை ஒரு டச்சுக்காரர் காலனித்துவ நாடாக மாற்றி அங்குள்ள பொருளாதார நலன்களையும் வளங்களையும் ஏகபோக உரிமையுடன் அனுபவிப்பதுடன் அங்கு வேரூன்றி விட்டிருந்த கத்தோலிக்க மதத்தை அடியோடு அகற்றி தமது சீர்திருத்த மதமாகிய புரட்டஸ்தாந்தை நடைமுறைப்படுத்த எண்ணினர்.

மேற்கில் அத்திலாந்திக் சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள டச்சுக்காரர் கிழக்கில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள இலங்கையை ஒல்லாந்த நாடாக்க வேண்டுமெனக் கனவு கண்டார்கள்.

போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து முற்றாக விரட்டுவதற்கு சிறந்த கடல் வலிமையை உடைய டச்சுக்காரரின் உதவியை நாடுவதைத் தவிர கண்டி மன்னன் இராசசிங்கனுக்கு வேறு வழி தெரியவில்லை.

இராசசிங்கன் டச்சுக்காரரின் உள்நோக்கத்தை தீவிரமாக ஆராய்வதை விட்டு அவர்களின் உதவியுடன் போர்த்துக்கீசரை நாட்டை விட்டு அகற்றி விடவேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

பல்வேறுபட்ட முற்றுப் பெறாத தீர்வுகளின் மத்தியில் கண்டி மன்னன் இராசசிங்கனுக்கும் நெதர்லாந்து நாட்டின் சார்பில் கடற்படைத் தளபதி வெஸ்ரர் வோல்ட் (Wester wold) இற்கும் இடையில் 1638 இல் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்விரு பகுதியினருக்குமான உடன்படிக்கையில் பல கொள்கை முரண்பாடுகளும் தெளிவின்மையும் காணப்பட்டன. அவைபற்றிய விபரங்கள் இங்கு அவசியமில்லை. ஆனால் தன்னை டச்சுக்காரர் முழு இலங்கைக்குமான மன்னன் என ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் போர்த்துக்கீசரை இலங்கையிலிருந்து நீக்கிவிட்டு தனது அரசுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பவையான முக்கிய அம்சங்களை இவ் உடன்படிக்கை வாயிலாக மன்னன் இராசசிங்கன் எதிர்பார்த்தான்.

மாறாக எந்தவொரு உள்நாட்டு, வெளிநாட்டு குறிப்பாக ஆங்கிலேய, பிரான்ஸ், ஜேர்மனிய, டென்மார்க் போன்ற ஐரோப்பிய வர்த்தகர்களோ வர்த்தக நிறுவனங்களோ இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக உரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்றும் இவ் உடன்படிக்கை மூலம் டச்சுக்காரர்கள் எதிர்பார்த்தார்கள்.

அத்தோடு பாதுகாப்புக் கருதிப் போர்த்துக்கீசரிடம் இருந்து கைப்பற்றும் துறைமுகப் பிராந்தியங்களில் தமது பாதுகாப்பு அரண்களை அமைக்கவும் தமது படைகளை அங்கு அமர்த்தவும் அனுமதிக்க வேண்டுமெனவும் இவ் உடன்படிக்கை மூலம் டச்சுக்காரர் எதிர்பார்த்தனர்.

மேற்கூறப்பட்ட உடன்படிக்கையிலிருந்து இராசசிங்கனின் எதிர்பார்ப்பு எவ்வளவு தூரம் பேராசையும் குறுகிய நோக்கமும் கொண்டதாகவும் அரசியல் தூர நோக்கு அற்றதாகவும் உள்ளது என்பது புலனாகின்றது.

டச்சுக்காரர் ஏற்கனவே தாம் வகுத்த கொள்கைத் திட்டங்களை அடைவதற்காக எவ்வளவு கச்சிதமாக காரியத்தை முடித்திருக்கின்றார்கள் என்பதை அவர்கள் முன்வைத்த மேற்படி தீர்வுத் திட்டங்களிலிருந்து நன்கு புலனாகின்றது.

1658களிலிருந்து 1687கள் வரையுள்ள காலப்பகுதியில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகள் இராசசிங்கனின் மேற்சொன்ன அரசியல் தூரநோக்கமின்மையும் அவனது அவசர அரசியல் நடவடிக்கையையும் துல்லியமாகக் காட்டி நிற்கின்றன.

1658 களிலிருந்து 1796கள் வரை நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகள் டச்சுக்காரரின் திட்டமிட்ட கொள்கையின் அடிப்படையில் அமைந்தமையையும் தமது திட்டங்களை வென்றெடுப்பதற்காக உடன்படிக்கையில் நயவஞ்சகமான அத்திபாரத்தைப் பலமாக இட்டமையும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

இராசசிங்கனின் மேற்படி தூரநோக்கற்ற அரசியல் செயற்பாடும் இலங்கை முழுவதற்கும் தானே அரசனாக வேண்டும் என்ற எதுவித அரசியல் அடித்தளமுமற்ற பேராசையும் இறுதியில் அவன் மரணப் படுக்கைக்குச் செல்லும்வரை டச்சுக்காரர்களுடன் தொடர்ச்சியாக ஈடுபட்ட பல போர்களில் பல உயிர்கள், சொத்துக்கள் என்பவற்றை இழந்தது மட்டுமல்லாமல் கண்டி இராச்சியத்தின் ஆளுகைக் குட்பட்டிருந்த பல நிலப் பரப்புக்களைப் பறிகொடுத்த துர்ப்பாக்கிய நிலைக்கும் தள்ளப்பட்டான்.

ஆனால் டச்சுக்காரர் திட்டமிட்டபடி இலங்கையின் தென்மேற்குப் பிரதேசம், வடபிரதேசம், கிழக்குப் பிரதேசம் ஆகிய யாவற்றையும் போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றித் தமதாக்கிக் கொண்டனர்.

போர்த்துக்கீசரிடமிருந்து டச்சுக்காரரினால் மீட்கப்பட்ட பிரதேசங்கள் உடன்படிக்கையின் படி தனக்குரியதென கண்டி மன்னன் வாதாடினான்.

ஏற்கனவே அப்பிரதேசங்கள் கோட்டை இராச்சியத்தின் கீழிருந்தும் யாழ்ப்பாண இராச்சியத்தின் கீழிருந்தும் போர்த்துக்கீசரினால் கைப்பற்றப்பட்டு அவர்களால் ஆளப்பட்ட பிரதேசங்களெனவும் தற்போது போர்த்துக்கீசரோடு போராடியே தாம் அவற்றைப் பெற்றிருக்கின்றோம் எனக்கூறிய டச்சுக்காரர் அவற்றில் இராசசிங்கனுக்கு எதுவித உரிமையும் இல்லை என்று மறுத்துவிட்டனர்.

(தொடரும்)

# சபாநாயகர் கருஜெயசூரிய 14 ஆம் திகதி வீட்டுக்கு செல்லத் தயாராக வேண்டும்

## சபை முதல்வர் தினேஷ் சூளுரை



(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் போது தற்போதைய சபாநாயகர் கருஜெயசூரிய வீட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கும் என புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன சூளுரைத்துள்ளார்.**

நாட்டின் ஜனநாயகம் பேணப்பட வேண்டியது பாராளுமன்றத்திலே தவிர ரணில் விக்கிரமசிங்க நித்திரை கொள்ளும்அலரிமாளிகையில்அல்ல. நாட்டின் சபாநாயகரொருவர் தன் கட்சி சார்பாக செயற்படுவது கூட அரசியலமைப்பை மீறும் செயற்பாடு என்பதை கரு ஜெயசூரிய புரிந்துகொள்ள வேண்டும் எனவும் சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்ற சுற்று வட்டாரத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். மக்களின் தீர்விற்கமையவே தற்போதைய புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதனை மீறி செயற்படுவதற்குரிய அதிகாரம் யாருக்கும் கிடையாது.

பாராளுமன்ற அமர்வினை கூட்டுவதற்கும், ஒத்தி வைப்பதற்கும் இடைநிறுத்துவதற்குமான அதிகாரம் நாட்டின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதியிடம் மாத்திரமே காணப்படுகின்றது.

ஜனாதிபதியால் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமே சபாநாயகர் செயற்பட முடியுமே தவிர, அவருக்கு எந்த தன்னிச்சையான அதிகாரமும் கிடையாது. தன்னிடமில்லாத அதிகாரத்தை கொண்டு சபாநாயகர் செயற்பட முற்படுவாரானால் விரைவில் வீடு செல்லவேண்டியநிலை வரும் எனத் தெரிவித்தார். (இ-7)

## விவசாயியை தேடும் பொலிஸார்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - மஹா ஓயா, நுவரகலதென்ன பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் காணாமல் போயுள்ளதையடுத்து பொலிஸார் அந்நபரை தேடி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

62 வயதுடைய எஸ். எம். திஸ்ஸஹாமி எனும் விவசாயியே இவ்வாறு கடந்த முதலாம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி மஹா ஓயா பொலிஸில் முறைப்பாட்டு வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார்.

விவசாயக் கூலி வேலையில் ஈடுபடும் இவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்க பெற்ற முறைப்பாட்டை அடுத்து குறித்த நபர் தேடப்பட்டு வருவதாக மஹாஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரைத் தேடும் பணிகள் மட்டக்களப்பு பதுளை வீதி காட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1550

### மீனா

திருமண வாழ்க்கை சரியாக அமையாவிட்டால் அதற்குக் காரணம்



எங்கோ இருக்கும் ஒன்பது கிரகங்களல்ல இரு பிடிவாத இதயங்களே...!

### யுவராஜ்

உங்கள் இரகசியங்களை யாரோடும் பகிர்ந்து கொள்ளாதீர்கள்



உங்களாலேயே அதை இரகசியமாக வைக்க முடியாத போது மற்றவர்களாலும் முடியாது

### ஜெரோம்

சோகமாய் இருக்கும்போதும்கூட சிரித்துக்கொண்டேயிரு



உன் சிரிப்புக்காகவே உன்னை ஒருவர் நேசிக்கக்கூடும்

### மாகீர்

தன்னலம் பார்க்காமல் பொதுநலத்தோடு உழைக்கும் விவசாயி மகன் பார்வை கர்வத்தோடு சொல்கிறது



ஆமாம் நாங்கள் தன்மானத்தோடு வாழுற தமிழ் விவசாயி தான்

### ரேஷ்மா

இந்த ஒரு சிரிப்பிற்காகத்தான்



ஒட்டுமொத்த விவசாய இனமும் போராடுகிறது

### ஈசன்

யாரிடமும் கை ஏந்தாமல் விவசாயிகளால் ஏர் கலப்பை பிடித்து வாழ முடியும்



ஆனால் விவசாயியிடம் கை ஏந்தாமல் யாராலும் உயிர் வாழ முடியாது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## மைத்திரியின் திடீர் முடிவால்

# திரிசங்கு நிலையில் ராஜபக்ஷவினர்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிரசாரச் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புகைப்படங்களை உள்ளடக்க வேண்டாம் எனவும், ராஜபக்ஷ குடும்பத்தினரின் புகைப்படங்களை மட்டும் உள்ளடக்குமாறும் அந்த முன்னணியின் ஆதரவாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மகிந்த மற்றும் மைத்திரியின் புகைப்படங்கள் அடங்கிய சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தீர்மானத் திற்கு அமைய மகிந்த ராஜ பக்ஷ. பசில் ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் புகைப்படங்களை உள்ளடக்கிய சுவரொட்டிகளை நாடு முழுவதும் ஒட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது.


நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்திற்கு தேவையான 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பணத்தை கொடுத்து திரட்ட முடியாத சூழ்நிலையில், ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள தீர்மானித்துள்ளதாக ராஜபக்ஷவினருக்கு கிடைத்துள்ள நம்பிக்கையான தரப்புத் தகவல்கள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படங்கள் அடங்கிய பெரிய பதாகைகளை உடனடியாக அகற்றுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பிலும் உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மீறி செல்லும் விதமான எந்த சந்தர்ப்பமும் ராஜபக்ஷவினருக்கு வழங்கப்படக்கூடாது என மைத்திரி தரப்பு தீர்மானித்துள்ளதாகவும் இதற்கமையவே ஊடகத்துறைக்கு பொறுப்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை கெஹலிய ரம்புக்வெலவுக்கு வழங்காது இராஜாங்க அமைச்சர் பதவியை வழங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. (இ-7)

# தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மகிந்தவுடன் இணைவது மிக முக்கியம்

## அரசிற்கு ஆதரவு கோருகிறார் கருணா



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்தால் மிகவும் நல்லது என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

எனினும் அவரை புதிய அரசாங்கத்துடன் இணைய விடாமல் தடுப்பது வெளிநாட்டு சக்திகள் என கருணா தெரிவித்துள்ளார்.

பிரத்மராக மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்திற்கு வந்துள்ளமை குறித்து பெரும்பான்மை தமிழ் மக்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

தேசிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் வருத்தமடைந்துள்ள வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்திருந்தனர். தற்போது தேவைப்பட்ட மாற்றம் அந்த மக்களுக்கு கிடைத்துள்ளது.

அத்துடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் புதிய அரசாங்கத்தில் இணைவது மிகவும் முக்கியமாகும். அதற்கமைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புதிய அரசாங்கத்திற்கு விருப்பம் தெரிவிக்கும். அத்துடன் எனது கட்சி அடுத்த தேர்தல்களில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் சிறந்த சக்தியை கொடுக்கும் என கருணா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த- மைத்திரி இணைவதே உங்களது நீண்டகால எதிர்பார்ப்பு எனத் தெரிகிறது

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறுகிறார்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருவரும் இணைவது உங்களது நீண்ட கால எதிர்பார்ப்பு என்பது எனக்குத் தெரிகிறது என அமைச்சர் ஆறுமுகம் தொண் டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் மகிந்த - மைத்திரி அரசாங்கத்தின் பலத்தைக் காட்டும் வகையிலான "மக் கள் மகிமை" என்ற கூட்டமொன்று நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொட்டும் மழையிலும் நீங்கள் வந்து இந்தக் கூட்டத் திற்கு ஆதரவு தெரிவித்துள் ளீர்கள் என்றால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இணைவது உங் களது நீண்டகால எதிர்பார் ப்பு என்பது எனக்கு தெரிகி றது.

அத்துடன், தற்போது தோட்டத் தொழிலாளர்களு க்கு கட்டாயம் 1000 ரூபாய் சம்பளம் கிடைக்கும் என்ப தில் எமக்கு முழு நம்பிக்கை வந்து விட்டது.

அத்துடன் இலங்கை தொழி லாளர் காங்கிரஸ் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு ஆதரவு வழங்கும் எனவும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 240 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 100 | 130 | 140 | 105 | 160 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 140 | 110 | 250 |
| தக்காளி | 250 | 300 | 280 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 30 | 50 |
| கோவா | 150 | 140 | 150 | 110 | 160 |
| கரட் | 160 | 240 | 200 | 120 | 400 |
| பூசணி | 60 | 50 | 50 | 30 | 80 |
| புடோல் | 160 | 140 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 250 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 140 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 130 | 120 | 95 | 140 |
| பாகற்காய் | 300 | 320 | 320 | 100 | 400 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 120 | 60 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 300 | 80 |
| பயற்றங்காய் | 180 | 340 | 300 | 80 | 400 |
| லீக்ஸ் | 120 | 120 | 160 | 60 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 170 | 160 |
| கறிமிளகாய் | 250 | 260 | 200 | 100 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 120 | 200 | 200 |
| போஞ்சி | 300 | 280 | 280 | 180 | 320 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 200 | 190 | 280 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 40 | 30 | 60 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 180 | 180 | 250 | — | 350 |
| வெங்காயப்பூ | 350 | — | — | 110 | — |
| முள்ளங்கி | 80 | 100 | — | 40 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | 60 | 120 | 80 |

# செய்தித்துளிகள்

## ஆட்டோ மீது மரம் விழுந்ததில் இருவர் மரணம்; மூவர் காயம்

ஆட்டோ மீது மரம் முறிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் உடப்புசல்லாவையில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. (இ-7)

## யானை தாக்கி விவசாயி பலி!

(பொத்துவில்)

பொத்துவில் தகராம்பளை பகுதியில் யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

யானை தாக்கி உயிரிழந்த விவசாயி நூறானிய்யா வீதி, பொத்துவில் - 07 ஐச் சேர்ந்த 56 வயதுடைய அலியார் அபூசாலி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விவசாய நடவடிக்கைகளுக்காக சென்றவரே யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கொலைக்குற்றச்சாட்டில் துப்பாக்கியுடன் ஒருவர்கைது!

(மதுகம)

மதுகம - யடதொலவத்த பிரதேசத்தில் நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜனவரி மாதம் ஆறாம் திகதி சந்தேக நபர், ஒருவரைத் தாக்கிக் கொலை செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பேருந்துக் கட்டணம் குறைப்பு விசேட பேச்சுவார்த்தை இன்று

(கொழும்பு)

பேருந்துக் கட்டணத்தை குறைப்பது தொடர்பான விசேட பேச்சுவார்த்தை இன்று இடம்பெறவுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் பேருந்து உரிமையாளர்கள் சங்க அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஸ்டேன்லி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைக் குறைப்பின் நிவாரணத்தை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அமைச்சரவை பேச்சாளர்களாக இரு அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளர்களாக இரண்டு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் வெகுசன ஊடகம் மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## ஹெரோயினுடன் பெண் கைது




(கொழும்பு)

ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் திக்வெல்ல - தொடம்பஹல பிரதேசத்தில் வைத்து நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் பேரில் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 50 கிராமிற்கு அதிகமான ஹெரோயின் போதை பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## அதிசய மோதிரம்



முன்னொரு காலத்தில் கிராமம் ஒன்றில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தான். செய்வதற்கு வேலையும் கிடைக்காமல், அப்படி வேலை கிடைத்தாலும் அதன்மூலம் போதிய வருமானம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் ஒரு நாள்... தேவதை ஒன்று அவனிடம் வந்தது.

அந்தத் தேவதையிடம் அவன், தனது வாழ்க்கையில் அவன் படும் கஷ்டங்களையெல்லாம் சொன்னான். தனக்கு ஒரு விடிவு காலம் வருமாறு வழிவகை செய்ய வேண்டுமென்றும் தேவதையிடம் வேண்டிக் கொண்டான்.

"நான் சொல்கிறபடி செய்... நேராக இதோ எதிரே தெரியும் காட்டுக்குள் செல். அங்கு பலவகையான மரங்கள் உள்ளன. அவற்றில் எல்லா மரங்களையும் விட ஒரு மரம் உயரமாக வளர்ந்து நிற்கும். அந்த மரத்தின் பெயர் பைன் மரம். அதை அப்படியே வெட்டிப் போடு. அப்புறம் அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வரும். உன் கஷ்டங்கள் எல்லாம் தீரும்" என்று அந்தத் தேவதை ஏழை விவசாயிக்கு வழிகாட்டியது.

அடுத்த நாளே அந்த ஏழை விவசாயி கையில் கோடரியை எடுத்துக் கொண்டு காட்டை சென்றடைந்தான். காட்டுக்குள் இருந்த பைன் மரத்தைக் கண்டுபிடிக்க இரண்டு நாட்கள் அங்குமிங்கும், தேடி அலைந்தான். இறுதியில் ஓங்கி உயர்ந்து நின்று கொண்டிருந்த பைன் மரத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான்.

பிறகு, தனது கையிலிருந்த கோடரியால் பைன் மரத்தின் அடிப்பாகத்தை ஓங்கி வெட்டினான். அது தரையின் மீது விழும் போது அதன் முனைப் பகுதியில் இருந்து ஒரு பறவைக் கூடும் விழுந்தது. அக்கூட்டில் இரண்டு முட்டைகள் இருந்தன.

விழுந்த வேகத்தில் அந்த முட்டைகள் உருண்டோடி உடைந்தன. ஒரு முட்டையிலிருந்து ஒரு கழுகுக் குஞ்சு வெளிப்பட்டது. இன்னொரு முட்டையிலிருந்து ஒரு மோதிரம் வெளிவந்து உருண்டோடியது.

கழுகுக் குஞ்சு பெரிதாக வளர்ந்து கொண்டே போனது. அந்த விவசாயியின் பாதியளவுக்குப் பெருத்து விட்டது. இந்தக் காட்சியைக் கண்டு விவசாயிக்கு ஒரே ஆச்சரியம். அவனால் தனது கண்களையே நம்ப முடியவில்லை. அந்தக் கழுகு தனது சிறகை அடித்துப் பறக்கும் முன் விவசாயியைப் பார்த்து, "எனது அடிமைத்தளத்திலிருந்து எனக்கு விடுதலை அளித்து விட்டீர்கள். உங்களுக்கு எனது நன்றி.

அடுத்த முட்டையிலிருந்து வெளிவந்துள்ள மோதிரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது ஓர் ஆச்சரியமான அதிசய மோதிரம். நீங்கள் எதைக் கேட்டாலும் அது கொடுக்கும். ஆனால், அதை ஒரே ஒரு தடவை பயன்படுத்தி விட்டால், அது சாதாரண மோதிரம் ஆகிவிடும். இது தான் அந்த மோதிரத்தின் அற்புத சக்தியாகும். எனவே, ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுங்கள். அசட்டையாய் இருந்து விட்டால், பின்னர் வருத்தப்பட நேரிடும்" என்று கழுகு சொல்லிவிட்டு உயரே பறந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது.

மிகவும் மகிழ்ச்சி அடைந்தான் விவசாயி. அந்த மோதிரத்தை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டான். செல்லும் வழியில், அங்குள்ள நகைக் கடைக்குச் சென்றான்.

நகை வணிகரிடம் அந்த மோதிரத்தைக் காட்டி, "இதன் மதிப்பு என்ன இருக்கும்?" என்று கேட்டான். மோதிரத்தை வாங்கிப் பார்த்த நகை வணிகர், "இதற்கு ஈடாக யாரும் ஒரு புல்லுக்கட்டு கூடத் தரமாட்டார்கள்" என்று கூறினான்.

நகை வணிகர் கூறியதைக் கேட்ட விவசாயி சிரித்துக் கொண்டே அவரிடம், "இந்த மோதிரத்தின் மகிமையைப் பற்றி உனக்குத் தெரியாது. உலகத்திலுள்ள எல்லா மோதிரங்களையும் சேர்த்தாலும் இதன் மதிப்புக்கு ஈடாகாது" என்று கூறிய விவசாயி, அந்த மோதிரம் தனக்கு எப்படிக் கிடைத்தது என்றும் விளக்கமாகக் கூறினான்.

விவசாயி கூறியதைக் கேட்டு, மோதிரத்தின் மகிமையை அறிந்து கொண்ட நகை வணிகனின் உள்ளத்தில் பேராசை தலை தூக்கியது. அவன் அந்த மோதிரத்தை அபகரிக்கத் திட்டம் போட்டான்.

விவசாயியிடம் வணிகர் மிகவும் கனிவாக, "ஐயா, நீங்கள் இன்று இரவு எனது வீட்டில் தங்கிவிட்டு, நாளை காலையில் செல்ல வேண்டும் என்பது என் விருப்பம்" என்று கூறினான். விவசாயியும் அதற்குச் சம்மதித்தார்.

அன்று இரவு விவசாயிக்கு நல்ல அறுசுவை விருந்து. விருந்தின் முடிவில் திராட்சை ரசம் வேறு. அதை வாங்கிக் குடித்த விவசாயி சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தான்.

அந்தச் சமயம் பார்த்து விவசாயியின் கையிலிருந்த மோதிரத்தைத் திருடிக்கொண்டு, ஒரு சாதாரண மோதிரத்தை மாட்டி விட்டான் வணிகன்.

விவசாயி நன்றாகத் தூங்கினான். "மோதிரத்தைப் பயன்படுத்தி உலகின் முதல் பணக்காரனாக ஆகி விடலாம்" என்று எண்ணி ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தான் வணிகன்.

மறுநாள் பொழுது விடிந்தது. சிறப்பான விருந்து கொடுத்தமைக்கு நன்றி சொல்லி விட்டு, நகை வணிகனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு தனது வீட்டை நோக்கிப் புறப்பட்டான் விவசாயி.

நகை வியாபாரியோ, அந்த மாய மோதிரத்தைத் தன் கை விரலில் அணிந்து கொண்டு, ஒய்யாரமாகத் தன் இருக்கையில் அமர்ந்தவாறே, மாய மோதிரத்தைப் பார்த்து, "எனக்கு ஐந்தாயிரம் பொற் காசுகள் வேண்டும்" என்று கேட்டான்.

மோதிரம் தனக்குள்ளாக, "அடப்பாவி! ஒரு அப்பாவி ஏழையை ஏமாற்றி, அவனிடமிருந்து என்னைத் திருடி, என் மூலம் உலகப் பணக்காரன் ஆகப் பார்க்கிறாயா? இதோ, உன் கதையை இப்போதே முடித்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டது.

நகை வணிகன் கேட்டுக் கொண்ட மாதிரியே, அந்த மோதிரம் தங்கக் காசுகளை அவனது தலையில் மழை போல்பெய்து கொண்டிருந்தது.

தங்கக் காசுகள், "பட் பட்" என்று அவனது தலை மீது விழுந்தன. "தலை வலிக்கிறது, போதும் போதும்!" என்று கத்தினான். ஆனால், தங்க மழை நின்றபாடில்லை.

கடைசித் தங்கக் காசு அவனது தலையில் விழுந்தவுடன் தங்க மழை ஓய்ந்து போனது.

ஆனால், விழுந்து கிடந்த தங்கக் காசுகளை அந்த வணிகனால் எடுக்க முடியவில்லை. காரணம், தங்க மழை ஓய்வதற்கு முன்பே அவனது உடலை விட்டு அவனது உயிர் போய்விட்டது.

தங்க மழை பெய்ததால், நகை வியாபாரி இறந்து விட்டார் என்ற செய்தி காட்டுத் தீ போல் பரவியது. நகை வியாபாரியின் வீட்டை நோக்கி ஓடினர். நகை வியபாரி மீது தங்கக் காசுகள் குவிந்து கிடந்தன.

"இப்படி மழைபோல் தங்க காசுகள் வந்தால், தீமையும் வராமலா போய் விடும்" என்று வந்தவர்கள் பேசிக்கொண்டனர். பின்னர் ஆளுக்கு இரண்டு தங்கக் காசுகள் எடுத்துக் கொண்டு அவரவர் வீட்டை நோக்கிச் சென்றனர்.

பின்னர் நகை வியாபாரியின் கைவிரலில் இருந்த அந்த மாயமோதிரம் தானே கழன்று, அந்த விவசாயியின் வீட்டை நோக்கி பறந்து சென்றது.

## விடுகதைகள்

- காலையில் கோட்டை கட்டுவேன். கடும்பகல் யுத்தம் செய்வேன். மாலையில் மடித்துக் கட்டுவேன். நான் யார்?
  துணி வெளிப்பவன்
- இரண்டு தோட்டம், நான்கு வேலி, பூப் பூத்தால் தோட்டம் பாழ். அது என்ன?
  கண்கள்
- அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி ஒன்று வாலினால் தண்ணீரை வற்ற வற்றக் குடிக்குது. அது என்ன?
  விளக்குத் திரி
- அடி காட்டில் நடு மாட்டில் நுனி வீட்டில். அது என்ன?
  நெல்
- எங்க அம்மா புடைவையை மடிக்க முடியாது. எங்க அப்பா பணத்தை எண்ண முடியாது. அவை என்ன?
  வானம், விண்மீன்கள்

## கூடி வாழ்வோம்

பறவை எல்லாம் பாடுச்சு
பக்கம் வந்து தேடுச்சு

கறவை மாடு சிரிச்சுச்சு
கறந்து பாலும் தந்துச்சு..!

குடிச்சி பறவை மகிழ்ந்துச்சு
கூட்டம் சேர கத்துச்சு

பசிக்கு இங்கே வந்திட
பாடிப் பாடி அழைச்சிச்சு..!

எங்கிருக்கும் பறவையும்
எகிறிப் பறந்து வந்துச்சு

இனத்தின் குரலைக் கேட்டுச்சு
இறங்கி வந்து பார்த்துச்சு..!

கோமாதா நமக்கு எல்லாம்
குடிக்க பாலும் தந்துச்சு

கூடி நாமும் கூட்டம் போட்டு
"அன்னை" யென்று சொல்லுச்சு..!

பாதுகாக்கும் தாயாக
பட்டி தொட்டி சொல்லுது

சாதுவாக இருந்த அதுவும்
சினந்து காடு வெல்லுது..!

பறவைக் கூட்டம் நாமெல்லாம்
போற்றி அதை வணங்குவோம்

சிறகாய் நாமும் இருந்துமே
பறக்க வைத்து மகிழுவோம்..!

நல்ல இதயம், தங்கத்துக்குச் சமம்.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல்வாதிகளே! நிதானத்தை இழந்து விடாதீர்கள்

தென்பகுதி அரசியலில் ஏற்படுகின்ற அதிரடி மாற்றங்கள் தமிழ் மக்கள் மத்தியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

வெளிப்பார்வையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளே முதன்மை பெறுவதாகத் தோற்றமளித்தாலும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் என்பதற்கு அப்பால், தென்பகுதி அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஈழத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினையில் குழப்பங்களையும் அமைதியின்மைகளையும் ஏற்படுத்தி விடுகின்றன.

அதாவது ஆட்சியில் ஏற்படுகின்ற மாற்றம் என்பது சிங்கள மக்களைப் பொறுத்த வரை ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகைமைக்குள் அடங்கி விடும்.

ஆனால், அத்தகையதொரு சூழ்நிலை தமிழ் மக்களுக்கு இல்லை என்பதே உண்மை.

இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்துள்ளார்.

பிரதமராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ தனக்கிருக்கக்கூடிய பெரும்பான்மைப் பலத்தை பாராளுமன்றத்தில் நிரூபித்தாக வேண்டும். இதற்கான முயற்சிகள் நடந்தவண்ணமுள்ளன.

அதேநேரம் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதில் ஐக்கிய தேசியக் கட்சி அதிதீவிரம் காட்டி வருகிறது.

ஆக, நிலைமை என்னவாகும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பதுதான் ஒரேவழி என்பதில் மறுகருத்துக்கிடமில்லை.

இருந்தும் அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளின் ஆதிக்கம் இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்துகிறது என்ற செய்தியையும் இவ்விடத்தில் நாம் கூறித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, இத்தகையதோர் நெருக்கடியான சூழ்நிலையில்தான் தமிழ் அரசியல் தரப்புக்கள் சரியான தீர்மானங்களை; முடிவுகளை எடுக்க வேண்டும்.

தவிர, அவ்வாறு சரியான தீர்மானங்களை எடுக்கின்றபோது, நிதானமும் பதட்டப்படாத மன உறுதியும் அவசியமாகின்றது.

ஆட்சியாளர்களை அல்லது எதிர்த்தரப்புகளை விமர்சிப்பதாகக் கருதி நாம் முன்வைக்கின்ற கருத்துக்கள் தமிழ் மக்களுக்குப் பாதகமாகவோ அல்லது சிங்கள மக்களுக்கு வெறுப்பையோ ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது.

இதை இன்னும் சுருக்கமாகக்கூறின் தமிழ் அரசியல் தரப்புக்களின் கருத்துக்கள் தமிழினத்துக்குச் சாதகமாக இருக்கும் அதேவேளை அந்தக் கருத்துக்கள் நியாயமானவை என சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்வதாக இருக்க வேண்டும்.

இருந்தும் தமிழ் அரசியல் தரப்பின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் சிலர் தமது வெறுப்பை வார்த்தை வடிவில் வெளிப்படுத்துகின்றனர்.

இஃது ஒட்டுமொத்தச் சிங்கள மக்களிடமும் எங்கள் தொடர்பில் கோபத்தை ஏற்படுத்துவதுடன் சர்வதேசத்தின் மத்தியிலும் தமிழ் அரசியல்வாதிகள் உரிய கௌரவத்தைக் கொடுக்கத் தெரியாதவர்கள் என்ற முடிவுக்கு வந்து விடும்.

இத்தகைய நிலைமை எமக்கு அவ்வளவு நல்லதல்ல என்பதால் கருத்துரைப்பவர்கள் வார்த்தைக்கு வார்த்தை மிக நிதானமாக உச்சரிக்க வேண்டும்.

# மகிந்தவை பிரதமராக ஏற்றதாலேயே நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருகின்றார்கள் – நாமல் ராஜபக்ஷ

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக ஏற்றுக்கொண்டதாலேயே ஐக்கிய தேசிய கட்சியினர் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடி நிலை தொடர்பில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவது என்பது சட்டத்திற்கு முரணானது. நாடாளுமன்ற கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதனால் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவர முடியாது.

அவர்கள் பொதுமக்களை தவறாக வழிநடத்துகின்றார்கள். இந்த நேரத்தில் அவர்கள் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருகின்றார்கள் என்றால் அவர்கள் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக ஏற்றுக்கொள்கின்றார்கள் என்று அர்த்தம்.

ஒரு நேரத்தில் புதிய பிரதமர் நியமிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்த அவர்கள் தற்போது அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவோம் என்கின்றார்கள்.

இவர்கள் ஊடகங்களுக்கு முன்னால் விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள், அத்துடன் உட்கட்சி பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் உட்கட்சி பிரச்சினைகளை தீர்க்க அவர்கள் மக்கள் பணத்தை கொண்டு முயற்சிப்பது வேதனை அளிப்பதாக அவர் கூறினார். (ம)

## மகிந்த அணியிலிருந்து மேலும் 15 பேர் ஆதரவு

### அஜித் பெரேரா தெரிவிப்பு

புதிய அரசாங்கத்தில் இருந்து மேலும் 15 உறுப்பினர்கள தமது பக்கம் இணையவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் நேற்று (செவ்வாய்க் கிழமை) அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அஜித் பி பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தத்தமது கட்சிகளின் பெரும்பான்மையினை நிரூபிப்பதற்கான கட்சித்தாவல்கள் தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில், மனுஷ நாணயக்கார புதிய அரசாங்கத்தில் தான் பெற்றுக் கொண்ட அமைச்சுப்பதவியினை இராஜினாமா செய்துள்ளதுடன், மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதாகவும், ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படுவதற்கு தயாராக உள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து பதவியேற்ற புதிய அமைச்சரவையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மனுஷ நாணயக்கார வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கோடிகளில் பேரம் பேசுபவர்கள் எதைக் கேட்டாலும் கொடுப்பார்கள்

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினரகளுக்கு கோடிகளில் பேரம் பேசுபவர்கள் தற்போது எழுத்துமூலம் எதைக் கேட்டாலும் கொடுப்பார்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைதொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஐக்கிய தேசிய கட்சிக்கு இதுவரையில் ஆதரவு வழங்கவில்லை எனவும அவர் தெரிவித்தார்.

கூட்டமைப்பு நாட்டின் ஜனநாயக விழுமியங்களுக்கே ஆதரவாக செயற்பட்டு வருவதாக எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டார். (ம)

## விஞ்ஞான தின விழா

யா/இந்து மகளிர் கல்லூரியின்விஞ்ஞான தினவிழாவும் 'முகை' சஞ்சிகை வெளியீடும் நாளை வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு விசாலாட்சி மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் திருமதி எம்.விமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் வைத்தியர் திருமதி பாமினி ரமணன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம)

## பண்டாரநாயக்க விமான நிலையத்தில் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டுக்குள் தங்க ஆபரணங்களை கொண்டுவர முயற்சித்த ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்யப்பட்டதாகவும், அவரிடம் இருந்து 8.9 மில்லியன் ரூபாய் பெறுமதியான 1.49 கிலோகிராம் நிறைகொண்ட தங்க ஆபரணங்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் சிங்கப்பூரில் இருந்து வருகை தந்தவர் என்றும், அவர் கண்டியை சேர்ந்த 49 வயதுடையவர் என்றும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர் விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஓய்வுப் பொழுதைக் கழிக்க...

- கிடைக்கும் ஓய்வு நேரத்தைக் குடும்பத்தினருடன் இன்பமாய் போக்குங்கள்.
- சிறிது ஓய்வாக இருந்துவிட்டு நீங்களே வீட்டைப் பராமரியுங்கள்.
- நல்ல புததகங்களை வாங்கிப் படித்துப் பயனுள்ள கருத்தைப் பின்பற்றுங்கள்.
- குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து மகிழ்ச்சியளிக்கக்கூடிய இடங்களுக்குச் சென்று வாருங்கள்.
- ஓய்வு என்பது ஓய்வாக இருக்கத்தானே தவிர உறக்கத்திற்கு அல்ல என்பதையும் அறிந்திடுங்கள்.
- இயற்கையை நேசியுங்கள். ஓய்வுப் பொழுதை இனிமையாய், அருமையாய்க் கழித்திடுங்கள்.

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### அனுமதிப்பவர் அவரே!



✦ கடவுளின் விருப்பம் இல்லாமல் உலகில் எதுவும் நடக்காது. ஒரு மரத்தின் இலை அசைவதும் அவர் அனுமதித்தால் தான்.

✦ சோம்பிக் கிடக்கும் மனிதன் தேங்கிய குட்டை போல ஆகி விடுவான். முயற்சி இருந்தால் வெற்றிக்கதவு திறக்கும்.

✦ பாலும், தண்ணீரும் கலந்திருந்தாலும் அன்னம் பாலை மட்டும் அருந்தும். அதுபோல மனிதன் உலகிலுள்ள நன்மையை மட்டுமே ஏற்கப் பழக வேண்டும்.

✦ பயன் இல்லாத வீண்விஷயங்களில் காலம் தாழ்த்த வேண்டும். இறைவனை நாடுவது ஒன்றே நம் பிறவிக்கான பயன்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்"

*–கரலோஸ் இலினேயஸ் (தாவர வகைப் பாட்டியலாளர்)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில கல்லாரை பிரதேசத்திலும் (மல்லாகம்) வவுனியா பிரதேசத்தில் தோணிக்கல் கிராமம், மகாமயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, குடாகச்சக்கொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டான் பிரதேசம், வங்காலை, வங்காலை இராணுவமுகாம், வங்காலை நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (9)

# இனிங்ஸ் மற்றும் 74 ஓட்டங்களால் மகாஜனாக் கல்லூரி அணி வெற்றி

13 வயதுப் பிரிவு துடுப்பாட்டப் போட்டியொன்றில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணியை இனிங்ஸ் மற்றும் 74 ஓட்டங்களால் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி வீழ்த்தியது.

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து நடத்தும் 13 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான மட்டுப் படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட ஒருநாள் துடுப்பாட்ட போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் 5 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்டத்தில் மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் 16.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் மகாஜனா அணி சார்பாக ஜேம்சன் 6 விக்கெட்களையும், கோகுல்நாத் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மகாஜனாக் கல்லூரி அணி, 42 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்ற போது, ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில் வஜிகரன் 86 ஓட்டங்களையும், யோவெல் றொசான் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

156 ஓட்டங்கள் பின்னிலையில் தமது இரண்டாவது இனிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி, 31.3 ஓவர்களில் 82 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது.



இனிங்ஸ் மற்றும் 74 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் வஜித் 32 ஓட்டங்களையும், தமிழ்குமரன் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் மகாஜனா அணி சார்பாக அபர்ணன் 5 விக்கெட்களையும், சறோமியன் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். (க-26)

# சிவகுரு பரமேஸ்வரி வெற்றிக்கிண்ணம் றேஞ்சர்ஸ் அணி சம்பியன்



பெனால்டி உதையில் சிறப்பாகச் செயற்பட்டு, சிவகுரு பரமேஸ்வரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை றேஞ்சர்ஸ் அணி தனதாக்கியது.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம், அமரர் சிவகுரு பரமேஸ்வரி ஞாபகார்த்தமாக, வடமராட்சி லீக்கிற்குட்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை தமது விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவந்தது.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதல் அரையிறுதியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதியது. இதில் றேஞ்சர்ஸ் அணி, 5:0 என்ற கோல்கள் கணக்கில் இலகுவாக வென்றது.

இரண்டாவது அரையிறுதியில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதியது. இதில் கலைமதி அணி, 3:1 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

இறுதிப்போட்டி 5 ஆம் திகதி நடைபெற்றது. இதில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது. ஆட்டநேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன.

சம்பியன் அணியை தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. அதில், றேஞ்சர்ஸ் அணி, 05:03 என்ற கோல்கள் கணக்கில் வென்று சம்பியனாகியது.

றேஞ்சர்ஸ் அணியின் ஆர்த்திகன், தொடர்நாயகன், வளர்ந்து வரும் வீரன் மற்றும் மக்கள் மனம்கவர்ந்த வீரன் ஆகிய விருதுகளையும், அதே அணியின் கீர்த்தனன், சிறந்த கோல் காப்பாளர் விருதையும், அதே அணியின் மாதுஜன் சிறந்த பின்கள வீரர் விருதையும் வென்றார். (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக் கழகத்தின் அனுமதியுடன் வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தால் மறைந்த உறுப்பினர் செல்வராணி சுதந்திரராஜா ஞாபகார்த்தமாக வடமாகாணத்தில் உள்ள அனைத்து அணிகளையும் உள்ளடக்கிய மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறது.



இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 077 453 0111, 077 112 8358, 077 519 4152 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

# இப்படியே போனால் அனைத்து சாதனைகளையும் முறியடித்துவிடுவார் கோலி - கவாஸ்கர் தெரிவிப்பு

விராட் கோலி இன்னும் பத்து ஆண்டுகள் விளையாடினால், கிரிக்கெட்டில் அனைத்து சாதனைகளையும்முறியடிப்பார்என முன்னாள் வீரர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலி நேற்று முன்தினம் தனது 30ஆவது பிறந்தநாளை கொண்டாடினார். கடந்த 2008ஆம் ஆண்டு 19 வயதிற்குட்பட்டோருக்கான இந்திய அணியை கோலி சிறப்பாக வழிநடத்தினார். அதன் பின்னர் சில ஆண்டுகள் கழித்து இந்திய அணியில் இடம்பிடித்து சிறப்பாக செயற்பட்டார். தற்போது அணித் தலைவராக அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றி வருகிறார்.

அத்துடன் அதிவிரைவாக 10 ஆயிரம் ஓட்டங்கள் என பல சாதனைகளையும் படைத்து வருகிறார். இந்நிலையில், கோலியின் துடுப்பாட்டம் குறித்து முன்னாள் வீரர் கவாஸ்கர் கூறுகையில்,

'ஒரு வீரர் இத்தனை உடற் தகுதியுடன் இருந்தால், வெறும் 5-7 ஆண்டுகள் மட்டுமல்ல இன்னும் 10 ஆண்டுகள் கூட ஆட முடியும். சச்சின் போல 40 வயது வரை ஆட முடியும். கோலியும் அந்த வயது வரை ஆடினால், டெஸ்ட் சாதனைகள், ஒருநாள் சாதனைகள் என அனைத்து சாதனைகளையும் முறியடித்து விடுவார் என தெரிவித்துள்ளார்.

கோலியின் துடுப்பாட்டம் சராசரி டெஸ்டில் 54.57 ஆகவும், ஒருநாள் போட்டியில் சராசரி 59.83 ஆகவும், இருபது-20 இல்சராசரி48.88 ஆகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது. (க)



கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக்கழகம் நடத்திய கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஜெகமீட்பர் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. நேற்றைய செய்தியில் வேறொரு அணியின் குழுப்படம் பிரசுரமாகியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## ஜனநாயகத்து...

திய இரா. சம்பந்தன் கடந்த வாரத்தில் பிரதமரை நீக்கியமை உள்ளடங்கலாக இடம்பெற்ற சம்பவங்கள் அரசியலமைப்பிற்கு விரோதமானவையாகும் எனத் தெரிவித்தார்.

மேலும் பாராளுமன்றம் கூடுவதனை காலந்தாழ்த்தும் செயலானது ஜனநாயக விழுமியங்களுக்கு எதிராக செய்யப்பட்ட ஒரு செயலை கட்சி தாவும் நபர்களுக்கு பல்வேறு பதவிகளையும் வேறு காரியங்களையும் கொடுத்து சட்டபூர்வமான ஒன்றாக காட்டுவதற்கு வழிவகுக்கின்றது எனவும் தெரிவித்தார். மேலும் உடனடியாக செயற்பட்டு பாராளுமன்றத்தினை கூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தான் சபாநாயகரை எழுத்து மூலமாக கேட்டுக்கொண்டதனையும் இரா. சம்பந்தன் எடுத்துக் கூறினார்.

அரசாங்கமானது தமிழ் மக்களின் பிரச்சினைகளை போதியளவு கையாளவில்லை என தெரிவித்த இரா சம்பந்தன், அரசியல் கைதிகளின் விடுதலை.மீள்குடியேற்றம் புனர்வாழ்வு,படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பு,காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை.போன்ற விடயங்களில் அரசாங்கம் மந்த கதியிலேயே செயற்பட்டது எனவும் தெரிவித்தார். இந்த விடயங்களில் போதியளவு முன்னேற்றம் காணப்படாமையானது தமிழ் மக்களின் மத்தியில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பிளவுபடாத பிரிக்கமுடியாத நாட்டிற்குள் உண்மையான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தீர்வொன்றினை அடைவது அத்தியாவசியம் என்பதனை வலியுறுத்திய இரா சம்பந்தன் , அத்தகைய தீர்வினை அடைய முடியாத பட்சத்தில் இந்த நாடு எதிர்நோக்கியுள்ள எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது போகும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அரசாங்கமானது சர்வதேசத்திற்கும் ஐ.நா.மனித உரிமை பேரவைக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் நோக்கில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கை தொடர்பில் ஆக்கபூர்வமான பங்களிப்பினை கொடுக்க வேண்டும் என தூதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கேட்டுக்கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமெரிக்க தூதுவர், ஜனநாயக வழிமுறைகள் பின்பற்றப்படுவதனை அமெரிக்கா வலியுறுத்துகின்றது எனவும் தற்போது நிலவும் சூழ்நிலைக்கு ஜனநாயக வழிமுறைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மேலும் ஐ.நா. மனித உரிமை பேரவை தீர்மானத்தின் நோக்கத்திற்கும் அதன் நடைமுறைப்படுத்தலிற்கும் அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும் உறுதியளித்தார்.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்த சந்திப்பில் அமெரிக்க தூதுவரோடு அமெரிக்க தூதரகத்தின் பிரதி பொறுப்பாளர் ரொபேர்ட் ஹில்டன் மற்றும் அரசியல் பிரிவின் பொறுப்பாளர் அந்தனி ரென்சூலி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம)

## பாராளுமன்ற...

உத்தரவுகளை ஏற்க மறுத்து வருகின்றனர் என கொழும்பு டெலிகிராவ் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல் நெருக்கடியை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலிருப்பதற்காக ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் சபாநாயகரை விமர்சித்து வருகின்றனர் என தெரிவித்துள்ள கொழும்பு டெலிகிராவ் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தலைமையிலான பாராளுமன்ற பணியாளர்கள் சபாநாயகரிற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர் என தகவல்கள் கிடைத்துள்ளன என தெரிவித்துள்ளது.

தம்மிம தசநாயக்க தனது பணியாளர்களை சபாநாயகரின் உத்தரவுகளை புறக்கணிக்குமாறு வெளிப்படையாகவே உத்தரவிட்டு வருகின்றார் எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர் என்ற அடிப்படையில் நான் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலையே பின்பற்றவேண்டும் என அவர் குறிப்பிட்டுவருகின்றார் எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதியினால் சட்டவிரோதமாக இடைநிறுத்தப்பட்டுள்ள பாராளுமன்ற அமர்வுகளை மீண்டும் கூட்டுவதற்கான சபாநாயகரின் முயற்சிகள் பலனளிக்காத நிலை காணப்படுகின்றது பாராளுமன்ற செயலாளர் நாயகமும் அதிகாரிகளும் இதற்கு ஒத்துழைப்பை வழங்க மறுக்கின்றனர் எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை தினேஸ் குணவர்த்தன பௌத்த மதகுருமார்களுடன் பாராளுமன்றத்திற்கு சென்று அவைத்தலைவர் பொறுப்பை ஏற்க முயன்ற வேளை பாராளுமன்ற செயலாளர் நாயகமே நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்லயின் அலுவலக கதவை திறந்துவிட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து லக்ஸ்மன் கிரியல்ல சபாநாயகரை தொடர்புகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையையும் உரிமைகளையும் பாதுகாக்குமாறு கோரியவேளை சபாநாயகர் தான் அதிகாரமில்லாத நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார் என கொழும்பு டெலிகிராவ் குறிப்பிட்டுள்ளது

ஜனாதிபதியையும் புதிய பிரதமரையும் திருப்திப்படுத்துவதற்காக தசநாயக்க வெளிப்படையாகவே சபாநாயகரின் உத்தரவை ஏற்க மறுத்துவருவதுடன் தான் வர்த்தமானி அறிவித்தலையே பின்பற்றவேண்டும் என தெரிவித்துவருகின்றார் என சபாநாயகர் தனக்கு நம்பிக்கைக்குரியவர்களிற்கு தெரிவித்துள்ளார் எனவும் கொழும்பு டெலிகிராவ் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியின் அறிவிப்பை மீறி அதற்கு முன்னதாக பாராளுமன்றத்தினை கூட்ட முயன்றால் நானும் எனது பணியாளர்களும் அதற்கு ஒத்துழைக்க மாட்டேன் என சபாநாயகரிற்கு தசநாயக்க தெரிவித்துள்ளார். (ம)

## தீபாவளிக்கு...

யங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த இருவரும் நேற்று முன்தினம் மாலை தீபாவளி தினத்துக்கு புத்தாடைகள் வாங்குவதற்காக யாழ் நகருக்கு சென்று வீடு திரும்பியுள்ளனர்.

அப்போது அதிக மழை பெய்துகொண்டிருந்த வேளை சங்கிலியன் வீதியில் இரு சக்கர உழவு இயந்திரம் பருத்தித்துறை வீதி நோக்கி வந்துள்ளது. அப்போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த இளைஞர்கள் உழவு இயந்திரத்துடன் மோதியுள்ளனர். சம்பவ இடத்திலேயே மேற்குறித்த இளைஞர் மயக்கமடைந்து சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## பிரதமர் நியம...

என தான் கருதவில்லை என்று அவர் கூறியுள்ளார். அந்த செயற்பாடு அசாதாரணமானதாக இருந்தாலும் பிரித்தானியாவிலும் அதுபோன்ற அசாதாரணமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், இதனுடன் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி. அவர் நாட்டுக்கு சாதகமானதையே செய்வார் என நம்புவதாக அவர் கூறியுள்ளார். (ம)

# சபாநாயகர் அரசியலமைப்புக்கு முரணாக செயற்படுகிறார்

## அஸாத்சாலி குற்றச்சாட்டு

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதமரை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்த சபாநாயகர் தற்போது அதனை நிராகரிப்பதாக தெரிவிப்பது அரசியல் ரீதியிலான சர்ச்சைகளை ஏற்படுத்தும் செயலாகும். அத்துடன் சபாநாயகரின் கூற்று அரசியலமைப்புக்கு முரணாகும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

ஜனாதிபதி அரசியலமைப்புக்கு உட்பட்டே பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை நியமித்துள்ளார். அதனால்தான் சபாநாயகர் ஆரம்பத்தில் ஜனாதிபதியின் நியமனத்தை ஏற்றுக்கொண்டார்.

தற்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காட்டும்வரை இருந்த பிரதமரையே ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளார். சபாநாயகரின் இந்த கூற்றானது அரசியல் ரீதியில் நாட்டுக்குள் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடியதாகும். அத்துடன் அரசியலமைப்புக்கும் முரணாகும்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டாலும் ராஜபக்ஷவினருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகள் யாவும் முறையாக இடம்பெறும். அதுதொடர்பில் நாங்கள் அவதானமாக இருப்போம். அத்துடன் மகிந்த ராஜபக்ஷ கடந்த காலத்தில் அவருடன் சுற்றியிருந்தவர்களின் பேச்சைக்கேட்டு மேற்கொண்ட தவறுகளை மீண்டும் செய்யமாட்டார் என்று நம்புகின்றோம் என்றார்.(ம)

# அரச அதிகார கட்டமைப்புக்குள் தமிழரின் நலனை பேண முடியாது

## சிரேஷ்ட சட்டத்தரணி ஜோதிலிங்கம்

இலங்கையின் அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் தமிழ்மக்களுடைய நலனைப் பேணுவது என்பது மிகவும் சிக்கலான விடயம். இதனை சர்வதேச சமூகத்திடம் காட்ட வேண்டியது கட்டாய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உள்ளது என சிரேஷ்ட சட்டத்தரணியும் அரசியல் ஆய்வாளருமான சி.அ.ஜோதிலிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமஷ்டியும் வடக்கு - கிழக்கு இணைப்பும் தான் உயிருடன் இருக்கும் வரை நடைபெறாது எனக் கூறியமை தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் அங்கு எந்தக் கட்சி என்றாலும் பெரும் தேசிய வாதத்தை மீறிச் செயற்பட முடியாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இது தான் நிலை இதன் காரணமாகத்தான் தான் பெருந்தேசிய வாதத்துடன் நிற்கிறேன் என்பதைக் காட்டவேண்டும் என்பதற்காக வடக்கு கிழக்கு இணைப்பு சமஷ்டித்தீர்வு போன்றவை தான் உயிருடன் இருக்கும் வரை நடைபெறாது என்பதை கூறியுள்ளார். இதுதான் உண்மையான நிலையும் கூட.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் அங்கு எந்தக் கட்சி என்றாலும் பெரும் தேசிய வாதத்தை மீறிச் செயற்படமுடியாது. இதன் வெளிப்பாடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடைய தற்போதை நிலையுள்ளது. அவருடைய எதிர்கால இருப்பு, எதிர்காலத் தேவை முக்கியமாகவுள்ளது. இதற்காகத்தான். தான் பெருந்தேசிய வாதத்துடன் நிற்கிறேன் என்பதற்காக இதனைத் கூறியுள்ளார்.

தற்போதுள்ள பலவீனமான நிலையில் இது தேவையாகவுள்ளது. இதுவே உண்மையான யதார்த்தம். ஜனாதிபதி இதனை வெளிப்படையாகக் கூறிவிட்டார் மற்றவர்கள் இதனை வெளிப்படையாக கூறவில்லை.

இந்த யதார்த்தத்தை நாங்கள் எவ்வாறு சர்வதேசத்திடம் முன்வைக்கப்போர்கிறோம் என்பது தான் எங்கள் முன்னுள்ள சவால் ஆகும். 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அதியுச்ச அரசாங்கமானது இரண்டு கட்சிகளை ஒன்றிணைத்த தேசிய அரசாங்கம் ஆகும்.

இத்தகைய தேசிய அரசாங்கத்தை அமைத்தே தமிழ் மக்களுடைய சிறிய எதிர்பார்ப்புக்ககளைக் கூட முழுமையாக செய்ய முடியவில்லை. இது அனைவருக்குமே படுதோல்வி ஏனெனில் இலங்கையின் அரச அதிகாரக் கட்டமைப்புக்குள் தமிழ்மக்களுடைய நலனைப் பேணுவது என்பது மிகவும் சிக்கலான விடயம். இதனை சர்வதேச சமூகத்திடம் காட்டவேண்டிய கட்டாய பொறுப்புள்ளது. சர்வதேசம் தலையிட்டு எமக்கான தீர்வை முன்வைக்கவேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதற்கு கட்டமைப்பு சார் இனப்படுகொலை நிறுத்தப்படவேண்டும். சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறை உருவாக்கப்படவேண்டும். குறிப்பாக எமது நிலத்தை, மொழியை, பொருளாதாரத்தை கலாசாரத்தை அழிக்காத வகையில் ஒரு பாதுகாப்புப் பொறிமுறை அவசியம். இதற்கான நியாயப்பாடுகள் வரலாற்று ரீதியாக வந்துள்ளது. (ம)

# பாராளுமன்றத்தை உடன் கூட்டுமாறு பிக்குகள் நேற்று நடை பவனி

பாராளுமன்றத்தை உடன் கூட்டி ஜனநாயகத்தை உறுதி செய்யுமாறு கோரி மகா சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த பிக்குகள் நேற்று கொழும்பு புதிய நகர மண்டபத்துக்கு நடைபவனியாக சென்றுள்ளனர்.

இந்த நடைபவனியில் 500 பிக்குகள் கலந்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

கொவிசெத
திகதி 2018.11.06
சீட்டிழுப்பு இலக்கம் 1935
ஆங்கில எழுத்து S வெல்லப்பட்ட இலக்கங்கள் 02 04 39 48
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/11/06
சீட்டிழுப்பு இலக்கம் 3784
ஆங்கில எழுத்து S வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 1 6 4 9 0
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 2018/11/06
சீட்டிழுப்பு இலக்கம் 133
ஆங்கில எழுத்து C வெல்லப்பட்ட இலக்கங்கள் 03 10 48 56
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/11/06
சீட்டிழுப்பு இலக்கம் 469
லக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 02 11 37 59 31
தேசிய லொத்தர் சபை

## மழையுடன் கூடி...

மீற்றர் அளவில் மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேலும் வேறு மாகாணங்களில் 100 மில்லிமீற்றர் அளவில் மழை பெய்யும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அத்துடன் பலத்த காற்றில் இருந்து மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் கடலுக்கு செல்லும் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (ம)

## த.தே.கூக்கு...

தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கமைய கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் தாம் சந்திப்பிற்குச் செல்லவுள்ளதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் நலன் சார்ந்த விடயங்களை பேசுவதற்காக ஜனாதிபதி எங்களை அழைக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டும் கூட்டமைப்பின் நிலைப்பாடுகளை நேரடியாக தெரிவிப்பதற்காகவே ஜனாதிபதியுடனான சந்திப்பிற்குச் செல்லவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## அனைவரையும்...

இவ்வாறு இன்னும் சில உறுப்பினர்கள் எம்முடன் இணைந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவித்த ராஜித சேனாரத்ன, மகிந்த தரப்பினர் பணம், பதவியினை இலஞ்சமாக வழங்குவதன் மூலம் அனைவரையும் விலைக்கு வாங்கிவிட முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதுகருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஒரு பொது மேடையில் மனநலம் குன்றியவர்கள் போன்று செயற்படுபவர்களின் கருத்துக்களுக்கு எவ்வாறு பதிலளிக்க முடியும்? புதிதாக அரசியலில் பிரவேசித்துள்ள ஒருவரெனின் இவ்வாறு பேசலாம், இவ்வாறு பேசக்கூடாது, இது சரி, இது பிழை என வழிநடத்தலாம். ஆனால் இத்தனை வருடகாலமாக அரசியலில் ஈடுபட்டு வருகின்ற ஒருவர் இவ்வாறு செயற்படும் போது அவரை வழிநடத்துவதில் பயனில்லை. தூங்குபவரை எழுப்ப முடியும். தூங்குவது போன்று நடிப்பவரை எவ்வளவு முயற்சித்தாலும் எழுப்ப முடியாது.

புதிய பிரதமர் நியமனத்தினையும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற புதிய அமைச்சரவை நியமனங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது என சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவித்துள்ளார்.

116 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துக்களுடன் பாராளுமன்றத்தில் எம்முடைய பெரும்பான்மையினை நிரூபிக்கும் வகையிலான கடிதத்தினை நாம் சபாநாயகரிடம் கையளித்திருந்தோம்.

மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் அவ்விதமாக தம்முடைய பெரும்பான்மையினை எவ்வகையிலும் நிரூபித்திருக்காத நிலையிலேயே சபாநாயகர், புதிய அமைச்சரவை நியமனங்களையும், புதிய பிரதமர் நியமனத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது என அறிவித்துள்ளார்.

இந் நிலையில் தற்போது மகிந்த தரப்பு படிப்படியாகத் தோல்வியடைந்து வருகின்றது. ஜனநாயகத்திற்கும், அரசியலமைப்பிற்கும் எதிரான அவர்களது செயற்பாட்டிற்கு எதிராக எமக்கு 120 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதிகமானோரின் ஆதரவு கிடைக்கப் பெறும் என்றார். (ம)

## தமிழரின் நன்...

செய்ய முடியாததை இப்போது செய்ய முடியும் எனின் ஜனாதிபதி ஏன் அதை செய்யவில்லை எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

## எரிபொருள் பவு...

கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் உயிரிழந்தனர்.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது உயிரிழந்தார்.

உயிரிழந்தவர்களில் கிளிநொச்சி செல்வாநகரைச் சேர்ந்த செல்வராஜா கஜீபன் (வயது -18) என்ற இளைஞர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு மற்றைய இளைஞன் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-312-315)

## சபாநாயகரின்...

ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவிற்கு காணப்படும் நிலையில் இத்தகையதொரு கருத்தினை சபாநாயகர் முன்னரே வெளியிட்டிருக்க வேண்டும். ஆனாலும் காலங் கடந்தேனும் சபாநாயகர் தமது நிலைப்பாட்டினை அறிவித்துள்ளமையினையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம் எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சபாநாயகரின் கருத்திற்கு வரவேற்புத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சர்வதேசமே எம...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இன்று அரசியலமைப்பு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது என்று எமது அரசியல்வாதிகள் புலம்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

இதில் எந்த அர்த்தமும் இல்லை. ஏனெனில் இதுதான் வரலாறு என்று நன்கு தெரிந்துதான் நாம்அவர்களுடன் கரம் கோர்த்தோம். பதவிகளைப் பெற்றோம். பணம் பெற்றோம். அவர்களுடன் சேர்ந்து உலகுக்கு நல்லாட்சி என்றோம். ஒருபடி மேலே சென்று அவர்களை நெல்சன் மண்டேலாவுடன் ஒப்பிட்டு புகழ்ந்து பேசினோம்.

நாமே அவர்களை மனித உரிமைகள் சபையில் பிணை எடுத்தோம். அரசியல் அமைப்புமாற்றம் என்ற ஒரு மாயைக்குள் எமது இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டுசென்று எமது தனித்துவத்தையும் அரசியல் அபிலாஷைகளையும் கரைத்து விட்டோம். ஆனால் சிங்கள அரசியல்வாதிகளோ எம்மைப் பயன்படுத்தி தமக்கு எதிரானசகல தடைகளையும், உடைத்துவிட்டு எந்த விதமான குற்ற உணர்வும் இன்றி தமக்கிடையில் ஒரு அதிகார போட்டியில் இறங்கியுள்ளனர்.

இந்த அதிகாரப்போட்டியில் யார் கூடுதலாக தமிழ் மக்களை நசுக்குவார்களோ அவர்களே சிங்கள மக்களின் கூடுதலான வாக்கைக் கவரமுடியும் என்ற உத்தியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையில் எடுத்துள்ளார். தான்உயிருடன் இருக்கும் வரை வடகிழக்கு இணைப்புக்கோ சமஷ்டித் தீர்வுக்கோ இடமளிக்கப்போவதில்லை என்று கூறியுள்ளார்.

அவரை வைவதால் ஆவது ஒன்றுமில்லை. அவருடன் சேர்ந்து பேசுவதாலும் எதுவும் ஆகப்போவதில்லை. சர்வதேசங்கள் தான் இதுபற்றி கவனம் செலுத்த வேண்டும். ஒரு நிகழ்ச்சிநிரல் இன்றி செயற்பட்டமையே இன்றைய எமது இந்த கையறுநிலைக்கு காரணமாகும். எது எவ்வாறெனினும், நடந்தவை நடந்து முடிந்துவிட்டன. இனிமேலாவது. கட்சி நலன்களைப் புறந் தள்ளிவிட்டு கொள்கை அடிப்படையில்நிகழ்ச்சி நிரல் ஒன்றுக்கு அமைவாக நிறுவனப்பட்ட செயற்பாட்டை நாம் முன்னெடுக்கவேண்டும்.

அதாவது இருட்டில் கையாட்டிப் பார்க்காமல் பாதைதெரிந்து பயணிக்க வேண்டும். இன முரண்பாட்டுக்கான தீர்வு தொடர்பில் சிங்கள ஆட்சியாளர்களின் மனோநிலையை உலகுக்கு எடுத்தியம்ப வேண்டும். ஒற்றையாட்சி அடிப்படையிலான இலங்கை அரசியல் அமைப்புக்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டமைப்பு சார்தடைகளை சர்வதேச சமூகம் இனிமேலாவது புரிந்துகொள்ள வழி வகுக்க வேண்டும்.

தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்கு சமன் என்பதைப் புரிந்துகொண்டு இனிமேலும் காலம் தாழ்த்தாது தமிழ் மக்களுக்கான நீதியைப்பெற்றுக்கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வழிவகுக்க வேண்டும்.

சர்வதேச சமூகம் தற்போது தமிழர் பிரச்சினைகளை சார்பாகப் பார்க்க வேண்டிய காலம் கிட்டியுள்ளது. நாம் எமது கடமைகளைச் சரியாக ஆற்ற முன்வர வேண்டும். இது சம்பந்தமாக எதிர்வரும் ஜெனிவா மனித உரிமைகள் சபை கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் ஒரு சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கான பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவை முன் வைக்குமாறு உறுப்புநாடுகளையும் ஏனைய நாடுகளையும் எம் மக்கள் சார்பில் வேண்டிக் கொள்கிறேன்.

இலங்கையில் எவர் ஆட்சியில் உள்ளார்கள் என்று பார்த்து செயற்படாது பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள இலங்கை அரசு என்ற ரீதியில் போர்க்குற்ற விசாரணைக்கான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ளவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக வேண்டிக் கொள்கின்றேன். இதன் ஊடாகவே எமது சிங்கள சகோதரர்களுக்கு இறுதி யுத்தத்தில் என்ன நடைபெற்றது. எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள். எத்தனை பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்பது போன்ற உண்மைகளை எடுத்துச்சொல்ல முடிவதுடன், அதனால் புரிந்துணர்வை ஏற்படுத்தி உண்மையான இனநல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும்.

இல்லாதுவிட்டால் குற்றம் இழைத்தவர்கள் தம்மைப் பாதுகாப்பதற்காக போலித் தேசியவாதத்தைக் கையில் எடுத்து இனமுரண்பாட்டை மேலும் சிக்கல் நிலைக்கு உட்படுத்துவதற்கே இன்றையநிலைமைகள் வழிவகுக்கும். எமது மக்கள் தலைவர்கள் விரைந்து செயற்படுவார்களா? எனத் தெரிவித்துள்ளார். (ம-250)

## அச்சுவேலியில்...

பெற்றுள்ளது. இச்சம்பம் தொடர்பில் மேலும் தெரியவருதாவது,

இடைக்காடு வளலாய் பாம்விச் பகுதியில் மோட்டார்கள், ஆடுகள், கோழிகள், மேசன் வேலைக்கு பயன்படும் உபகரணங்கள் மற்றும் கடை உடைப்பு சம்பவங்கள் என பல திருட்டுச் சம்பவங்கள் அண்மைய நாட்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளன.

இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் சற்று பீதியில் இருந்துள்ளனர். இந்நிலையில் நேற்றைய தினம் நீர் இறைக்கும் மோட்டருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை வழிமறித்த வளலாய் இலந்தையடி வாலிபர்கள் அவர்களை தீர விசாரித்துள்ளனர்.

இதனால் கொண்டு சென்ற மோட்டர் திருடிச் செல்லப்பட்டது எனவும் திருகோணமலையில் இருந்து மேசன் வேலை செய்வதற்கு இங்கு வந்து அப்பகுதியில் தங்கியிருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதனால் இந்த இரண்டு திருடர்களையும் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (ம-78)

## வடக்கு - கிழக்...

ள்ளது.

இந்த செயலணியின் மூன்றாம் கட்ட கூட்டத்தின் போது அதனை நாடாளுமன்றத் தொகுதியில் நடத்துவதாக இருந்த போதும் நாளை அதனை ஜனாதிபதி செயலகத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை அடுத்து குறித்த செயலணியின் செயற்பாடு தொடர்பில் மீள்குடியேற்றத்துறை அமைச்சின் செயலாளர் சிவஞானசோதியிடம் தொடர்பு கொண்டு வினவியபோது வடக்கு, கிழக்கு அபிவிருத்தி செயலணி கூட்டம் திட்டமிட்ட வகையில் இயங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்துக்கு வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்கள், அமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை
(C-4321)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-4271)

பங்குச்சந்தை முதலீடுகளுக்கான முழுமையான அறிவு
Share Market Workshop அடிப்படை முதலீட்டு உத்திகள்
CSE COLOMBO STOCK EXCHANGE
நவம்பர் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி - மாலை 4.00 மணிவரை
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை, யாழ் - கிளையில்.
தொடர்புகளுக்கு: 021 222 1455 / 077 782 2014
பதிவுக்கட்டணம் ரூபாய்: 1000/=
(சி-4306)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.